பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a New

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 31 வியாழக்கிழமை (14.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 169

# மோதலில் சிக்குண்டுள்ளோரை மீட்க

# ஐ.நா. நடவடிக்கை எடுக்க அனுமதிக்குக!

## ஹிலாரியும், மில்லிபான்டும் அவசர கோரிக்கை





நியூயோர்க், மே 14

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவதற்கான ஐ.நாவின் நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்குமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனும், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லிபான்டும் இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வாஷிங்ரனில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரியை, டேவிட் மில்லி பான்ட் சந்தித்த பின்னர் இருவரும் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் ஏற்பட்ட அழிவுகளை உறுதி செய்கின்றன செய்மதிப் படங்கள்...!

### அமெரிக்க விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் தகவல்

கொழும்பு, மே 14

இலங்கையின் வடக்கே போர் நடைபெறும் பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயத்தில் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளமையை செய்மதிப் படங்கள் உறுதி செய்கின்றன - என்று விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமெரிக்க சங்கம் அந்தப் பகுதியில் எடுத்த செய்மதிப்படங்கள் குறித்த முதற்கட்ட ஆய்வில் தெரிவித்திருக்கின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடும் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி மீது இரண்டாவது நாளாக ஷெல் தாக்குதல்; 52 பேர் பலி, 117 பேர் காயம்!

கொழும்பு, மே 14

போர் நடக்கும் முள்ளிவாய்க்கால் பகுதியில் தற்காலிக வைத்தியசாலையின் மீது (...)ற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 52 பேர் செ(...)ப்பட்டனர், 117 காயமுற்றனர் எனச் தகவல்கள் (...)வித்தன.

இதுகுறித்து முள்ளி(...)க்கால் தற்காலிக வைத்தியசாலையின் டாக்டர் (...)கராஜா பி.பி.சி. தமிழோசைக்கு கூறியவை வரு(...)

இன்று (அதாவது (...)று) வைத்தியசாலை மீது இரண்டு ஷெல்கள் வீழ்(...)ன. இத்தாக்குதலில் 52 பேர் உயிரிழந்தனர். 63 பேர் காய மடைந்தனர். மேலும், வைத்தியசாலைப் பணியாளர் ஒருவரும் வேறு ஒரு தொண்டரும் உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் வைத்தியர்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. காயமடைந்தவர்களுக்கு உதவக் கூட இப்போது ஆள் பற்றாக்குறை நிலவுகிறது.

மேலும், வைத்தியசாலை வளாகத்தில் சுமார் 75 சடலங்கள் இருக்கின்றன. இந்தச் சடலங்களை அடக்கம் செய்யக்கூட முடியவில்லை. தற்போது (16ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைப் பணியாளர் ஷெல் வீச்சில் உயிரிழப்பு

கொழும்பு, மே 14

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பணிபுரிந்துவந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர் ஒருவர் ஷெல் தாக்குதலில் சிக்கி நேற்று உயிரிழந்துள்ளார் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தேர்தல் முடிவடைந்த கையோடு பாதுகாப்பு வலயத்தில் பாரிய மோதல்!

### இரத்தக்களரி அபாயம் என்கிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, மே 14

இந்திய பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் பாதுகாப்பு வலயத்தின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். இதனால் பெரும் இரத்தக்களரி அபாயமுள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரித்துள்ளது.

மே 13 இற்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமடையலாம் என்ற அச்ச நிலை காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் சாம் ஜரிவி, பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் பலியாவதற்கு முன்னர் பாதுகாப்புச் சபை அவர்களைப் பாதுகாப்பதற்கான தனது பொறுப்புணர்வை நிறைவேற்ற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களில் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 400 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஜனவரி முதல் கொல்லப்பட்டவர்களின் 'எண்ணிக்கை 7 ஆயிரத்துக்கும் அதிகமாக மாறியுள்ளது. பொதுமக்கள் மீதான இவ்வாறான பாரிய அழிவை ஏற்படுத்தும் தாக்குதலுக்கு யார் காரணம் என்ற சர்ச்சையைக் கருத்தில்கொண்டு மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு ஐ.நா. கண்காணிப்பாளர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளை அனுமதிக்குமாறு பாதுகாப்புச்சபை (16ஆம் பக்கம் பார்க்க)

## கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று 18 கிளைமோர்க் குண்டுகள் மீட்பு!

கொழும்பு, மே 14

கொழும்பு கிராண்ட்பாஸ், தொட்டலங்கப் பகுதியிலுள்ள லூக்கஸ் வீதியில் அமைந்துள்ள கராஜ் ஒன்றில் நேற்று மாலை அதி சக்தி வாய்ந்த 18 கிளைமோர்க் குண்டுகளை படையினர் மீட்டுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பொதுமக்களின் தகவலை அடுத்து (16ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வட்டுக்கோட்டையில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்பு

யாழ்ப்பாணம், மே 14

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து அடிகாயங் களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா (வயது 40) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள் ளது.

மல்லாகம் நீதிவான் எஸ்.பிரபாகரன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

நேற்று முன்தினம் இரவு அவர் மனை வியுடன் சண்டை பிடித்துக்கொண்டு வெளியே சென்றார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தர விட்டார்.

நேற்று மாலை 5மணியளவில் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட் டது. (1-78)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வணிகர் கழகம் ஊடாக மனிதாபிமான உதவிகள்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், மே 14

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் நலன்புரி நிலையங் களில் தங்கியுள்ளவர்களுக்கு மனிதாபி மான உதவிகளை வணிகர் கழகம் ஊடாக வழங்குவது என யாழ். வணிகர் கழகம் முடிவு செய்துள்ளது.

யாழ். வணிகர் கழகத்தின் விசேட கூட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் கழக அலுவலகத்தில் இடம்பெற்ற போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சகல வர்த்தகர்களும் வணிகர் கழகம் ஊடாக தமது மனிதாபிமான உதவிகளை யாழ். அரச அதிபரிடம் கையளித்து பாதிக் கப்பட்ட மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்வது என முடிவு செய்யப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் சகல பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்களின் பங்களிப்பைபெறும் நோக்கில், வர்த்தகப் பிரமுகர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு யாழ்.வணிகர் கழகத் தில் இடம்பெறவுள்ளது. (1-111)

# புல்மோட்டை நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 732 பேர் இடமாற்றம்

கொழும்பு, மே, 14

மோதல் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து புல்மோட்டைப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த ஆயிரத்து 732 பேர் புல்மோட்டை - சஹ னகம நிவாரண நலன்புரி நிலையத்திற்கு கடந்த திங்களன்று இடமாற்றப்பட்டுள் ளனர்.

புல்மோட்டை முஸ்லிம் மகா வித்தியால யத்தில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

கடந்த 14 நாள்களாக குறித்த பாட சாலையில் இவர்கள் தங்கவைக்கப்பட்டி ருந்ததினால், பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தமை யினாலேயே இவர்கள் இடமாற்றப்பட் டுள்ளனர்.

அத்துடன், குறித்த பகுதியிலுள்ள ஏனைய பாடசாலைகளில் தங்க வைக்கப் பட்டுள்ள பொதுமக்களை விரைவில் கட்டம் கட்டமாக இடமாற்ற நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்குமிட கூடாரங்கள் அமைக்கும் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமத நிலை கார ணமாகவே இந்த நிலை தோன்றியுள் ளதாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரி வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு போதிய போசாக்கில்லை ஐ.நா.சபையினர் கவலை தெரிவிப்பு

கொழும்பு, மே 14

மோதல் இடம்பெறும் பகுதிகளில் இருந்து போதியளவு உணவு இன்றி வெளியேறும் பொதுமக்கள் வவுனியா நலன்புரிநிவாரணக் கிராமங்களை அடையும் போது போசணைக் குறைபாட்டினால் அதி களவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

''யுத்த வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களின் மனிதாபிமான நிலைவரம் மிகவும் மோசமான நிலையில் காணப்படு வது வெளிப்படை உண்மை'' என உலக உணவுத் திட்டத்தின் பேச்சாளர் எமிலா கஸெல்லா தெரிவித்துள்ளார். இடம் பெயர்ந்த இம்மக்கள் ஒரு நாளிற்கு தேவை யான போதியளவு உணவு இன்றி காணப் படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களிடையே நாம் அவதானிப்பது, 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள்,கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் பாலும் குறை போசணையால் பாதிக்கப் பட்டுள்ளமையே என அவர் மேலும் தெரி வித்துள்ளதாக ஏ.எப்.பி தெரிவித்துள்ளது.

50,000க்கு மேற்பட்ட மக்கள் மோதல் வலயத்தில் சிக்கியுள்ளனர்.மேலதிக வளங் கள் இன்மையால் ஜூலை மாதம் அளவில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரி டும். ஏனெனில் தற்போது உள்ள உணவு எதிர்வரும் ஜூலை மாதம் வரையுமே போது மானதாக உள்ளது என எமிலா கஸெல்லா தெரிவித்துள்ளார். (203)

# கைதடியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைப்பு

கொழும்பு, மே, 14

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் கைதடி சித்த ஆயுள்வேத வைத்திய சாலையை சுமார் 400 கோடி ரூபா செல வில் புனரமைப்பதற்கு அரசு தீர்மானித்தி ருக்கிறது என சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச் சின் ஊடாக இந்த வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. ஒரு வார்ட்டில் ஐம்பதுபேர் தங்கி சிகிச்சை பெறுவதற்கு ஏற்ற வகையில் பத்து வார்ட் டுகள் அமைக்கப்படவுள்ளன என அவர் கூறினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையாக கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை உள் ளது. யுத்தம் காரணமாக இது பெரிதும் பாதிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிலுள்ள ஒரே சித்த ஆயுள் வேத வைத்தியசாலை இதுவே ஆகும். யுத் தத்தினால் இதன் கட்டடங்கள் பெரிதும் சிதைவடைந்துள்ளன.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் பத்து வார்ட்டுகளும், மருந்துப் பொருள் உற் பத்தியகமும், மருந்தகமும், ஆய்வுகூடம் மற் றும் வெளிநோயாளர் பிரிவு, நிர்வாகக் கட்ட டத் தொகுதி ஆகியனவும் அமைக்கப்படவுள் ளன என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கான தரவட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 14

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசா லைகளின் விசேட கல்விக்குப் பொறுப் பான ஆசிரியர்களுக்கான தரவட்டச் செய லமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடை பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தரவட்டத்தில் மருத்துவ முகாம் பெற் றோர் விழிப்புணர்வு பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்படுமெனவும் அறிவித் துள்ளார். (அ-1)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சைகள்

வலி.வடக்கு, மே 14

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு தோற்றவிரும்புப வர்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், 47, அராலி வீதி, சுங்கானை. அல்லது பொருளாளர், 182/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், வட மராட்சியைச் சேர்ந்தவர்கள் எஸ்.மகிந்தன் குறிஞ்சி, அல்வாய் வடக்கு, அல்வாய் என்ற முகவரியோடு தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-86)

## சந்திரபுர ஸ்கந்தாவில் நுழைவாயில் திறப்பு நாளை

யாழ்ப்பாணம், மே 14

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் அமரர் திருமதி சசிகலா விஸ்வலிங்கம் நினைவாக அமைக் கப்பட்ட வாணி சிலை மற்றும் நுழைவாயில் வளைவு ஆகியன நாளை முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மேலதிக கல் விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் கலந்து கொள்வார். (1-207)

## நூலகக் கண்காட்சி

சங்கானை,மே.14

வலி. மேற்கு பிரதேச சபையினரால் நடத்தப்பட்டுவரும் நூலக வார நிகழ் வில் இன்று வியாழக்கிழமை அராலி சரஸ் வதி மகா வித்தியாலயத்தில் கண்காட்சி யும் கருத்துரை வழங்கலும் நடைபெற வுள்ளன.பாடசாலை அதிபர் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் அராலி பொது நூலக வாசகர் வட்டத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கண்காட்சி நிகழ்வை காலை 9 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார். (1-14)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,மே 14

அகில இலங்கை திருமுறை மன்றத்தி னர் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளை யார் தேவஸ்தானத் தில் முதலாந்திரு முறை முற்றோதலை முன்னெடுத்து நாயன்மார் நால் வருக்கு அபிஷேகம், விசேட பூசை வழி பாடுகளை நடத்த வுள்ளனர்.

பின்னர் நாயன் மார்களை அங்கிருந்து யாழ். அத்தியடி சிதம் பர நடராஜர் விநா யகப் பெருமான் தேவஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்து பூசை வழி பாடு செய்து இரண் டாம் திருமுறை முற் றோதல் நிகழ்வு ஆரம் பமாகி தொடர்ந்து ஜூன் 14 ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. (1-7)


# திருமண வாழ்த்தும் விருந்துபசார அழைப்பும்

இணுவிலைச் சேர்ந்த திரு. திருமதி பரமலிங்கம் தம்பதியினரின் செல்வப் புதல்வன்

**தமிழீசன்** அவர்களுக்கும்

ஜேர்மனியைச் சேர்ந்த திரு. திருமதி சந்திரகுமார் தம்பதியினரின் செல்வப் புதல்வி

**கீர்த்தனா** அவர்களுக்கும்



நாளை (15.05.2009) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் இடம்பெறுகின்றது. திருமண பந்தத்தில் இணையும் தமிழீசன் கீர்த்தனா தம்பதியினரை இணுவில் சிவகாமி அம்பாள் துணையுடன் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

அன்றைய தினம் (15.05.2009) வெள்ளிக்கிழமை இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

திரு. திருமதி பரமலிங்கம் தம்பதியினர்
திரு.திருமதி ஜெயக்குமார் தம்பதியினர்
இணுவில். திரு.திருமதி தமிழ்மாறன் தம்பதியினர்.



பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் . . . . .

அனைத்து துறைகளிலும்

**இந்தியாவில் பட்டப்படிப்பு**

HINDUSTAN
COLLEGE OF ARTS AND SCIENCE
Affiliated To MADRAS UNIVERSITY

UNDER GRADUATE PROGRAMME

B.Sc.
(Biochemistry, Electronics & Communication Science, Microbiology, Biotechnology, Computer Science, Information Systems Management, Electronic Media, Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A

POST GRADUATE PROGRAMME

M.Sc.
(Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)
M.A
Public Relations

HINDUSTAN UNIVERSITY
HINDUSTAN INSTITUTE OF TECHNOLOGY & SCIENCE(HITS)

Bachelor of Engineering Degree Courses (B.E) (Duration 04 yrs)
Civil Engineering, Computer Science & Engineering, Electronics & Communication Engineering, Electrical & Electronics Engineering, Mechanical Engineering, Electronics & Instrumentation Engineering

B.Tech Degree Courses (Duration 04 yrs)
Information Technology, Polymer Technology, Rubber Technology

Post Graduate Programme
Master of Business Administration (MBA),
Master of Computer Apllication(MCA),
Master of Engineering Degree Courses (M.E),
Ph.D/M.S.(BY RESEARCH) PROGRAMMES

ELIGIBILITY
3 PASS
IN A/L

ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA

V4 Educational Consultancy(Pvt)Ltd

Head Office-
#7-1/1, W.A.Silva mawatha,
Wellawatte, Colombo-06,
0773867257

Branch-
#274, Pointpedro Road, Aanaippanthi Junction,
Jaffna. 0212228374, 0775936343.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனிதப் பேரவலம் தீவிரமாகும் காலம் இது!

இப்பத்தி வாசிக்கப்படும் போது அல்லது அடுத்து வரும் நாள்களில் வன்னியில் பெரும் இனப்படுகொலை - இரத்தக்களரிக் கொடூரம் - அரங்கேறப் போகின்றது என எச்சரிக்கப்படுகின்றது. போர் மேகங்கள் கொடூரமாகச் சூழ்ந்து, அதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தியாவில் மக்களவைத் தேர்தலின் இறுதிக்கட்ட வாக்களிப்பு நேற்றுடன் முடிவடைந்து விட்டது. நாளை மறுதினம் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பித்து மாலைக்குள் ஓரளவு முடிவுகள் பெரும்பாலும் வெளியாகிவிடும். அதன் பின்னர் புதிய அரசை அமைக்கும் பேரப் பேச்சுகள் முடுக்கி விடப்படும். அந்தப் பல தரப்பு முயற்சிகளின் பின்னர் புதுடில்லியில் புதிய அரசு தெரிவாகி, பதவி யேற்று அதிகாரத்துக்கு வர இன்னும் சில நாள்கள் பிடிக்கும்.

ஆக, தற்போதைய அரசு அதிகாரத்தில் நீடிக்குமா என்ற சந்தேகத்தில் அதிகாரமிழந்து தடுமாறிக் கொண்டிருக்க, புதிய அரசு தேர்வாகிப் பதவி ஏற்கும் வரை - குறைந்த பட்சம் ஒருவார காலத்துக்காவது - புதுடில்லியில் அதிகாரம் செலுத்தும் அரசுத் தலைமை இல்லை என்ற நிலைமை நீடிக்கும்.

அதுவும், தற்போது பதவியில் இருக்கும் காங்கிரஸ் தலைமையிலான அரசு ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் வெளிப்படையாகவே விட்டேத்தியாக - பொறுப்பற்று - செயற்பட்டது என்பது பகிரங்கமான உண்மை. தேர்தலில் தமிழகத்தில் தனக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக ஈழத் தமிழர்கள் யுத்தத்தில் கொன்றொழிக்கப்படுவதைத் தான் ஆட்சேபிப்பது போல அது காட்டிக் கொண்டது. இப்போது தேர்தல் முடிந்து விட்டது. தேர்தல் சமயத்திலேயே ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட போது அதைத் தடுக்க நாதியற்று இருந்த காங்கிரஸ் அரசு - ஆயுதங்கள், தளபாடங்கள், துருப்புகளுக்குப் பயிற்சி என இலங்கைப் படைகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கி இனப்படுகொலைக்குத் துணைபோன மன்மோகன் அரசு - தேர்தல் முடிந்து, புதிய அரசு பதவியேற்கவுள்ள சமயத்தில் மட்டும் பொறுப்புடன் நடந்தும் கொள்ளும் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

எனவே, இதுதான் சமயம் எனப் பார்த்து கொழும்பு தனது கைவரிசையைக் காட்டத் தயாராகி விடும் - தயாராகி விட்டது - என்பதே நோக்கர்களின் அவதானிப்பு ஆகும்.

முல்லைத்தீவில் யுத்தப் பிரதேசத்தில் புலிகளின் சகல நடவடிக்கைகளும் அடுத்த 48 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்ற இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவிப்பை இந்தப் பின்புலத்தில் பொருத்திப் பார்த்தால், வன்னியில் ஓடப்போகும் இரத்த ஆறின் கொடூரம் - கோரம் - எப்படி இருக்கும் என்பதை ஓரளவுக்கு ஊகித்து விடமுடியும்.

இத்தகைய கொடூரம் - மனிதப் பேரவலம் - அரங்கேறப் போவதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நேற்று முன்தினமே செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி சர்வதேச சமூகத்துக்கு எச்சரித்து விட்டது.

'தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசம்' அல்லது 'பாதுகாப்பு வலயம்' எனக் கொழும்பு அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகள் மீது கனரகத் தாக்குதல்கள் மிகக் கொடூரமாகவும், கோரமாகவும் தொடர்கின்றன. ஐ.நா.தொண்டுப் பணியாளர்கள், சர்வதேசப் பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள், சுயாதீன ஊடகவியலாளர்கள் என எவரையுமே அப்பகுதிக்குச் செல்லவிடாமல் தடுத்து வைத்துக்கொண்டு, 'சாட்சியம் ஏதுமற்ற போர்க் கொடூரம்' ஒன்றைக் கொழும்பு தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது. அங்கு இடம்பெறும் அராஜகங்கள் குறித்து ஐ.நாவிலிருந்து சாதாரண சுயாதீன அமைப்புகள் வரை யார் குரல் எழுப்பினாலும் அத்தரப்புகளைப் 'புலிகளுக்கு - பயங்கரவாதிகளுக்கு - ஆதரவாகச் செயற்படும் குற்றவாளிகள்' என அடையாளப்படுத்த எத்தனிக்கின்றது கொழும்பு.

அது மட்டுமல்ல. அவ்வாறு உண்மைகளை - தமிழர்களுக்கு நேர்ந்துள்ள படுபயங்கர அவல நிலைமையை - சர்வதேசத்துக்கு எடுத்துரைத்து, தமிழர்களைக் காப்பாற்ற மன்றாடி, இறைஞ்சும் தரப்புகளுக்கு எதிராகத் தனது சட்டத்தை ஏவி விடவும் கொழும்பு பின்நிற்பதில்லை.

சாட்சியம் ஏதுமற்ற யுத்தத்தை முன்னெடுப்பதை உறுதிப்படுத்தும் கொழும்பு, அந்த யுத்தத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் பெருங் கொடூரங்கள் குறித்துக் குரல் எழுப்பும் தரப்புகளை, அக் கொடூரங்களுக்கான சாட்சியங்களைத் தரும்படி கோருகின்றது. அவற்றைச் சமர்ப்பிக்க இயலாத நிலையில் இருக்கும் தமிழ்த் தலைவர்களுக்கு எதிராகத் தனது சட்டத்தின் அரூபக் கரங்களை ஏவி விடுகின்றது.

பொதுமக்களுக்கு - அப்பாவித் தமிழர்களுக்கு - எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் கொடூரங்கள் குறித்து நாடாளுமன்றுக்கு வெளியே பிரஸ்தாபித்து, அறிக்கை வெளியிட்டு, பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. போன்றோருக்கு எதிராக அவசரகாலச்சட்ட விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அரசு சட்ட நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளை ஏற்கனவே ஆரம்பித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் கடந்த வார இறுதியில் - மூன்று நாள்களில் - மூவாயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு, சுமார் இருபதாயிரம் தமிழர்கள் படுகாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும், இத்தகைய இனவழிப்பு இரத்தக்களரி அங்கு கொடூரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் அனைவரும் ஒன்று கூடி இப்போது அறிவித்திருக்கின்றார்கள். கூட்டாகக் கருத்து வெளியிட்டிருக்கும் அவர்கள் அனைவருக்கும் எதிராகவும் அரச மேலிடத்தின் ஆவேசம் பாயுமா என்பது தெரியவில்லை.

மக்கள் பேரழிவு குறித்து அலட்டிக் கொள்ளாமல் யுத்த தீவிரத்தில் முனைப்பாக இருப்பவர்களுக்கு, மக்கள் பிரதிநிதிகள் அடக்கி ஒடுக்கப்படுவதும் ஒரு பெரிய விடயமாக இருக்கமாட்டாது என்பது கவனிக்கத்தக்கது.

# போதியளவில் உதிரிப்பாகங்கள் வந்து சேராமையால் டிப்போக்களில் தவம் கிடக்கும் பஸ்வண்டிகள்

## போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம் மே.14

பஸ்வண்டிகளுக்கான உதிரிப் பாகங்கள் போதியளவு இன்மையால் குடாநாட்டில் உள்ள டிப்போக்களில் நூற்றுக்கணக்கான பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடாமல் தவம் கிடக்கின்றன.

நூற்றுக்கணக்கான பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடாமல் உள்ளதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் 71 பஸ் வண்டிகளும், பருத்தித்துறை டிப்போவில் 48 பஸ்வண்டிகளும் உள்ள போதிலும் 8 பஸ்வண்டிகளே தற்போது சேவையில் ஈடுபடுவதாக தெரியவருகின்றது.

கொழும்பில் இருந்து உரிய உதிரிப்பாகங்கள் எடுத்துவர தாமதம் ஏற்பட்டுள்ளதாலேயே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ரயர், பற்றரி, ரியூப், ஓயில் என பல் வேறு வகையான உதிரிப்பாகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இந்த பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடாமல் தவம் கிடக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் இரண்டு மாதங்களாக இந்த பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடவில்லை என்றும் அறியவருகின்றது.

குறைந்தளவு பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பயணிகள் பஸ்ஸுக்காக வீதியோரங்களில் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பருவகாலச்சீட்டினைப் பெற்ற பயணிகள், பாடசாலை மாணவர்கள் தனியார் பஸ் வண்டிகளில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய குறைபாடுகளை நீக்க உரிய உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பிரதான வீதிகளில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகள் வழமையைவிட மிகக் குறைந்தளவில் சேவையில் ஈடுபடுவதை சில வாரங்களாக அவதானிக்க முடிந்தது. (9-253)

# நூல் அறிமுக விழா

டாக்டர் சே.சிவசண்முகராஜா எழுதிய 'மருத்துவ நோக்கில் மரணக்கிரியைகள்' எனும் நூலின் அறிமுக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை பிரதம சித்த வைத்திய அதிகாரி ப.சுரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை தலைவர் டாக்டர் திருமதி சி.பஞ்சராஜா, யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ம.வேதநாதன், யாழ். சித்தமருத்துவத்துறை பேராசிரியர் சு.பவானி ஆகியோர் வாழ்த்துரைகளையும் இந்து கலாசாரத்திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சிறப்புரை ஆற்றுவார் டாக்டர் பொன்.இராமநாதன் நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டு உரையினையும் நிகழ்த்துவார். நூல் அறிமுகவுரையினை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஐ.கமலநாதனும், யாழ். பல்கலைக்கழக தமிழத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (1-9)

# இராணுவப் புலனாய்வாளர் எனக் கூறி பொது மக்களிடம் கப்பம் கோரியவர்

## பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்

வலி.வடக்கு, மே.14

இராணுவப் புலனாய்வாளர் என்று கூறி பொதுமக்களிடம் கப்பம் பெற்று வந்த இளைஞர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம், சூராவத்தைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தெரிவித்துள்ள தகவல்கள் வருமாறு:

வசதி படைத்தவர்களின் வீடுகளுக்குக் குறிப்பிட்ட இளைஞர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நீங்கள் புலிகள், புலிகளுக்கு உதவி செய்துள்ளீர்கள் உங்களைக் கொலை செய்யப்போகின்றோம் என்று பயமுறுத்தியுள்ளார்.

அத்துடன் குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் கப்பமாகத் தந்தால் உங்களைக் கொலை செய்யாது விடுவோம். உங்கள் அயலில் உள்ள குறிப்பிட்ட நபரிடம் பணத்தைக் கொடுங்கள் என்று பலரை மிரட்டி 14 லட்சம் ரூபாவரை கப்பமாகப் பெற்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லுடாவைக் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட இளைஞர் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் குறிப்பிட்ட ஒருவருடன் தொலைபேசியில் கப்பம் கோரி எச்சரிக்கை விட்டுக்கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் குறிப்பிட்ட நபரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

(203-86)

# பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு யுத்த நிறுத்தம் அவசியமானது

## கரித்தாஸ் தொண்டு நிறுவனம் கோரிக்கை

கொழும்பு, மே, 14

'வன்னிப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டுமானால் உடனடியாக யுத்த நிறுத்தமொன்றை அமுல்படுத்த வேண்டும்''

- இவ்வாறு கரித்தாஸ் தொண்டு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் யுத்தம் இடம்பெற்று வரும் வலயத்தில் சுமார் 50 ஆயிரம் பொதுமக்கள் சிக்கியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சர்வதேச யுத்த சட்டங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானதொரு விடயம் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

குறிப்பாக ஜெனீவாப் பிரகடனத்தின் அடிப்படையில் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தத்தின் காரணமாக பொதுமக்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என கரித்தாஸ் நிறுவனத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் லெஸ்லி எனா நைட் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பாதுகாப்பது குறித்து இரு தரப்பினரும் அதிக கவனம் செலுத்தவேண்டும் எனவும், யுத்த நிறுத்தத்தின் மூலம் மட்டுமே மக்களைப் பாதுகாக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் மேலும் தொடர்ந்தால் அதன் மூலம் பொதுமக்கள் மேலும் உயிரிழப்புக்களை எதிர் நோக்க நேரிடும் எனவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுத்தமான குடிதண்ணீர், உணவு, மருந்துப் பொருள்கள் மற்றும் தங்குமிட வசதிகளின்றி மக்கள் பேரவலத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர் என தமது தொண்டு நிறுவன ஊழியர்களின் தகவல்களை ஆதாரம் காட்டி அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் அகதி முகாம்களில் தங்கியுள்ள 20 ஆயிரம் மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனம் உணவு விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. (சி)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 01 | 15.05.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | மு.இ.07.44 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | பி.ப.01.57 வரை |
| [illegible] | 06.53 - 07.23 |
| [illegible] | 10.23 - 11.53 |

# மன்னார் வைத்தியசாலையில் இருந்து 117 பேர் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டனர்

கொழும்பு, மே 14

வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக மன்னார் பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டுத் தற்போது நன்கு குணமடைந்த 117 நோயாளர்கள் கடந்த திங்கட்கிழமை மாலை மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஆங்கில பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் அண்மையில் பல லட்சம் ரூபா செலவில் அதி நவீன முறையில் மேற்படி ஆங்கில பயிற்சிக்கல்லூரி அமைக்கப்பட்டது. வன்னியில் இடம்பெற்ற மோதல் காரணமாக மேலும் காயமடைந்த பொது மக்கள் மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படவுள்ளனர். இதனால் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக 117 பேரும் இடமாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆங்கில பயிற்சிக்கல்லூரிக்கு மாற்றப்பட்ட பொது மக்கள் இராணுவப் பாதுகாப்புடன் தற்போது அங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுள் ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் மற்றும் வயோதிபர்களும் அடங்குகின்றனர். நோயாளர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களுமே இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களைப் பார்வையிடுவதற்கு எவரையும் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆங்கில பயிற்சிக் கல்லூரியில் இவர்கள் தங்க வைக்கப்பட்[illegible]மையால் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 14

கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று மத்திய கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே பரீட்சை அனுமதி அட்டை கிடைத்த மாணவர்களை இப் பரீட்சைக்குத் தோற்றும்படி யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலன சபையின் ஆரம்ப கால செயலாளர்
சி.கிருஷ்ணகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பூபதி சின்னத்துரை

எமது ஆலயத்தின் நீண்ட கால தொண்டராவார். இவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் காளியம்பாள்
ஆலய பரிபாலனசபை

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் பார்வதி



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் 10/4, அம்பகர் ஒழுங்கை, பிரம்படி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பார்வதி நேற்று (13.05.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் இராசரத்தினம், சிவனேஸ்வரி, சிவராசா, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.05.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10/4, அம்பகர் ஒழுங்கை,
பிரம்படி,
கொக்குவில்.

தகவல்:
சோ.சிவராசா
(மகன் - மெக்கானிக்),
இராமநாதன் றோட், திருநெல்வேலி.

### சுப்பிரமணியம் கருணாநிதி (வாழைக்குலைக்குமார்)



பருத்திக்கலட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சூளானை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கருணாநிதி நேற்று (13.05.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா- காலஞ்சென்ற சரசுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான நவரத்தினம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். நவமலரின் (விக்கி) அன்புக் கணவரும். விதுசா, விதுசன் (மாணவர்கள்- யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை),லிவிசன்(மாணவன்,யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும். புஸ்பமலர்,தவமலர், அமரர் நாதன்,மற்றும் நந்தகுமார், மாலா, கமலவேணி, கிருஷ்ணவேணி, பேபிசறோ, பன்னீர்செல்வன், செந்தூர்ச்செல்வன், கோமளவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2009) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூளானை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் செல்வராசன்



வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசன் நேற்று (13.05. 2009) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வியாழரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் கிருஷ்ணானந்தியின் (ஆசிரியை, யா/ இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும் கார்த்திகன், ஆரபி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மங்களாதேவி, மார்க்கண்டேயர் (Expo Air), இரத்தினேஸ்வரி, விசுவநாதன், கணேசராசா (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), சண்முகராசா (சண்முகம் களஞ்சியம், சங்கரத்தை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2009) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## எந்திரவியல் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,மே.14

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் எந்திர தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான 2009/10ஆம் கல்வியாண்டுக்குரிய பதிவுகள் நாளை முதல் நான்கு நாள்கள் யாழ்பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினங்களில்பதிவுக்குரிய சகல ஆவணங்களுடன் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்கு சமுகம்தருமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (1)

## வேம்படி வீதியில் காவலரண் அகற்றப்பட்டது

வண்ணை, மே 14

யாழ். நகர வீதியில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் மற்றுமொரு காவலரணும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டது.

வேம்படி வீதி மற்றும் நான்காம் குறுக்கு வீதிச் சந்தியில் யாழ். அடைக்கல மாதா (ஓ.எல்.ஆர்) தேவாலய எதிரில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நிறுவப்பட்டிருந்தகாவலரணே அகற்றப்பட்டுள்ளதாகும்.

இதனால் புனித மரியாள் வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ். மத்திய கல்லூரி போன்ற பாடசாலை மாணவ, மாணவிகள் பாடசாலைக்கு செல்கையிலும் மீளவருகையிலும் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (1-160)

## கைதடி நவீல்ட் பாடசாலையில் நாளை கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 14

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர் பா.மதனரூபனின் நெறிப்படுத்தலின் கீழ் நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாம வலய விசேட கல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் என் முருகானந்தன், தென்மராட்சி வலய ஆலோசனையும், வழிகாட்டலும் ஆசிரிய ஆலோசகர் எஸ்.கோகுலதாசன் ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள். (7)

## பனை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 14

கொக்குவில் மேற்கில் நேற்று மாலை 5 மணியளவில் பனை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

கொக்குவில் மேற்கு, அம்பாள் வீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை நாகராசா (வயது 53) என்பவரே மரணமானவராவார்.

வழமை போல் மாலை நேரம் கள் எடுப்பதற்காக மரத்தில் ஏறிய வேளை தவறுதலாக வீழ்ந்து மரணமானார் எனத்தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படும் வழியில் மரணமானார் எனக் கூறப்படுகிறது. (1-78)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் பொருளியல்
விரிவுரையாளரான
திரு.வி. அருளானந்தம் அவர்களின்
பாசமிகு மாமனார்

### தேசிங்கம் குணசிங்கம்

அவரின் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபத்தினைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள் -
பட்டப்படிப்புகள் கல்லூரி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

இல. 10A, கதீற்றல் வீதியில் அமைந்துள்ள மேல் மாடி வீட்டின் கீழ்ப்பகுதி 3 அறைகள், ஹோல், குசினி, பாத்றூம் மற்றும் சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Doctors, Engineers சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

Mrs.XAVIER
இல.10A, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.
222.5687 (C/558561)

## விற்பனைக்கு

உரும்பிராய், பலாலி றோட்டில், கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள [illegible] வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு-0212225102

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் திரு. என். ஸ்ரீரஞ்சன்
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி சற்குணம் நடராஜா** அவர்களின்

இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

ஆசிரியர் வட்டம், யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார
சேவைகள்பணிமனையில்
சாரதியாகக் கடமையாற்றி
திருகோணமலையிலுள்ள மாகாண
பணிமனைக்கு இடமாற்றம்
பெற்றுச் சென்று
அகாலமரணமடைந்த

### சிவசுப்பிரமணியம் கணேசலிங்கம்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

சாரதிகள்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம். (85245)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை பூபதி



உரும்பிராய், உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பூபதி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் (முன்னாள் பிரபல வர்த்தகர், கந்தப்பளை) அன்பு மனைவியும், சக்திதேவி, சீவரட்ணம், சந்திராதேவி, வசந்தாதேவி, பத்மநாதன், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைராஜா, தியாகேஸ்வரி, செல்வரட்ணம், ஞானேஸ்வரன், நகுலேஸ்வரி, பிரேமலதா, மாதுமை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி சற்குணம் நடராசா



திருமதி சற்குணம் நடராசா 12.05.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் நடராசாவின் (முன்னாள் அதிபர் யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி கனகரத்தினம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் Dr. அன்பழகன் (அமெரிக்கா), தமிழரசி (கனடா), பொற்செல்வி (நூலகர், யா/மாநகரசபை), அறிவழகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகேஸ்வரி (அமெரிக்கா), சிவகுமார் (கனடா), ஸ்ரீரஞ்சன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), ஜெயநிதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற Dr.பரமானந்தம், திருமதி புஷ்பம் குமாரசாமி (லண்டன்), திருமதி பரிமளநாயகி கனகரத்தினம், துரைராசா (லண்டன்), Dr.நாகராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சங்கவை (அமெரிக்கா), அறவாணன் (அமெரிக்கா), எழிலன் (கனடா), செல்விகா (கனடா), கயல்விழி, பிரியா (கனடா), சத்தியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவகம், பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6808, 077 8259630

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவரையாளி இந்துக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியில் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலாபூஷணம் தெணியான், கல்லூரி அதிபர் எஸ்.நாகமணி ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா வெளியிட்டுவைக்க லயன் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம். ஜீவநதியின் பிரதம ஆசிரியர் த.கலாமணியும் படத்தில் காணப்படுகிறார். (படங்கள்: லிங்கம்)

## தீவுப் பகுதியில் சேதமடைந்த வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே14

தீவுப் பகுதியில் உள்ள பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்தப் பிரதான வீதிகளின் புனரமைப்பு இடம்பெற்று வருவதாக சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (203-224)

## வடமராட்சி வலய நாடகப் போட்டி முடிவு

வடமராட்சி,மே14

வடமராட்சி கல்வி வலய இசை, நாடகப் போட்டியில் பருத்தித்துறை, கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மூன்றாம் இடத்தை மாதனை மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (203-236)

## யாழ்.மாநகராட்சி மன்ற அபிவிருத்திக்கான ஆலோசகராக பொறியியலாளர் கிரிதரன்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஆலோசகராகப் பொறியியலாளர் ப.கிரிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இந்த நியமனம் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டு றவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் ப. கிரிதரன் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாநகர சபையின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் திட்டங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு இவர் ஆலோ சகராக இருந்து செயற்படுவார் என்று தெரி விக்கப்பட்டது. (203-224)

## இலங்கை அதிபர் சேவை தரம் 2:II நியமனம்; வெட்டுப்புள்ளியால் 464 பேர் பதவி இழப்பு

அச்சுவேலி,மே14

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II நியமனம் தொடர்பான வெட்டுப்புள்ளியால் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட 464 பேர் பதவி இழக்கின்றனர். இவர்கள் 155 புள்ளிக்குக் கீழ் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்டவர்களாவர்.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவி உயர்வுக்கு எழுத்துப் பரீட்சையில் 155 புள்ளி வெட்டுப்புள்ளி என உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெட்டுப் புள்ளி அறிவிப்பின் பிரகாரம் 154 புள்ளியும், அதற்குக் குறைவான புள்ளிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் அதிபர் சேவை நியமனத்தில் இருந்து புறம்தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் 354 சிங்களவர்களும், 53 இலங்கைத் தமிழரும், 33 முஸ்லிம்களும், 26 மலையகத் தமிழரும் ஏனைய இனத்தைச் சேர்ந்த ஒருவருமாக 464 பேர் பெற்றுக்கொண்ட நியமனத்தை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கு ஆயிரத்து 819 பேர் நாடளாவிய ரீதியில் நியமனம் பெற்றிருந்தனர். இவர்களில் ஆயிரத்து 355 பேர் பதவியைத் தொடர்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளது.

புதியவர்கள் 464 பேர் இதில் இணைக்கப்பட்டு பதவிஉயர்வு வழங்கப்படவுள்ளது.

கடந்தமுறை நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படாமல் இருப்பவர்கள் 155 புள்ளிக்கு மேல் எழுத்துப் பரீட்சையில் பெற்றிருத்தல் தமது நேர்முகப் பரீட்சைக்குரிய ஆவணங்களை உறுதிப்படுத்தும் சத்தியச் சான்றுடன் மேன்முறையீடு செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மேன்முறையீடு செய்வது தொடர்பான கல்வி அமைச்சின் விளம்பரம் மிக விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. (203-11)

## துன்னாலை சிவசுப்பிரமணிய கோயிலுக்குச் சித்திரத்தேர்

வடமராட்சி,மே14

துன்னாலை அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் கோயிலில் பல லட்சம் ரூபா செலவில் புதிய அழகான அறுகோண சித்திரத் தேர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இத்தேரினைத் திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்தபதி ஜீவரத்தினம் ஜெயபிரகாஸ் குழுவினர் நிர்மாணித்து வருகின்றனர். (203-236)

## இரண்டு மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம்

யாழ்ப்பாணம்,மே14

இரண்டு மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

கோதுமை மா, அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (203-224)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சமாதானக் கல்விச் செயற்பாடு

வண்ணை, மே.14

'சீப்பியார்' சமாதான - நல்லிணக்க பணியகத்தால் மேற்கொள்ளப்படும் சமாதான கல்விச் செயற்பாடு இன்று வியாழக்கிழமை நவாலி, ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ் பாடசாலையில் நடைபெறும்.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு மேற்படி விழிப்புணர்வுச் செயற்பாடு இடம்பெறுமென செயற்றிட்ட இணைப்பாளர் செல்வி சோபனா யோகலிங்கம் கூறினார். (203-160)

## இயற்கை விவசாயச் செய்கை மூலம் நச்சுத் தன்மையற்ற உணவுப் பயிர்

### புலோலியில் மேற்கொள்ள ஏற்பாடு

வடமராட்சி,மே14

புலோலிக் கிராமத்தில் இயற்கை விவசாயச் செய்கை மூலம் நச்சுத் தன்மையற்ற, இரசாயனக் கலப்பற்ற மாதிரி உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென சிறு சேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உதயமாகியுள்ளது.

இளைஞர்களை அதிகமாகக் கொண்ட இச்சங்கம் மந்திகை கிராமக்கோட்டுச் சந்திக்கு இடைப்பட்ட இடத்தில் 6 பரப்பு வெற்றுக் காணியில் மாதிரி இயற்கை விவசாயப் பண்ணை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இவ்விவசாயப் பண்ணையை ஆரம்பிக்கும் முகமாகக் குறிப்பிட்ட விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு புலோலி கமநல சேவை நிலையத்தில் பயிற்சிப் பட்டறை ஒன்று விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் அண்மையில் நடத்தப்பட்டது.

அத்துடன் இப்பண்ணை ஆரம்பிக்கவும், செயற்படுத்தவும் போதிய தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயத் திணைக்களம் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பண்ணையில் மரக்கறி வகைகளுடன், இஞ்சி, தூதுவளை, மஞ்சள் போன்ற மூலிகைப் பயிர்வகைகளும் சேதனப் பசளைகளை மாத்திரம் உபயோகித்து உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (203-236)

## பாடசாலைகளில் இயங்கும் நலன்புரி நிலையங்களை அடுத்த வாரமளவில் மூடுவதற்கு நடவடிக்கை

### தனியாக முகாம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே14

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய வலயப் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்கள் அடுத்த வாரம் மூடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 1500 குடும்பங்களும் கொடிகாமம் இராமாவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அடுத்த வாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., நெல்லியடி மத்திய ம.வி. ஆகியவை கல்விச் செயற்பாட்டுக்காக தமது சொந்தக் கட்டடங்களில் இயங்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பாடசாலைகள் தற்போது தனியார் கல்வி நிலையங்களில் கடந்த இரு வாரங்களாகக் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உள்ள 427 குடும்பங்கள், மகளிர் கல்லூரியில் உள்ள 455 குடும்பங்கள், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியில் உள்ள 391 குடும்பங்கள் ஆகியவற்றுடன் நெல்லியடி மத்திய ம.வியில் உள்ள குடும்பங்களும் கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (1-207)

## குடாநாட்டுச் சந்தைகளில் மீனின் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.குடாநாட்டு மீன்சந்தைகளில் மீனின் விலைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

குருநகர், பாஷையூர், கொட்டடி, கொழும்புத்துறை மீன் சந்தைகளில் மீனின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பெரிய மீன்கள் கிலோ 500 ரூபா வரைக்கும், சிறிய மீன்கள் கிலோ 300 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

இதேசமயம் நண்டு, கணவாய், இறால் போன்றவற்றின் விலைகள் குறைந்தே காணப்படுகின்றன. (203-224)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் கோப்பாய் பிரிவு தொண்டர்கள் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சிரமதானம் மூலம் பாதீனியம் அழிப்பு மற்றும் வளாகத்தைத் துப்பரவு செய்யும் பணியை மேற்கொண்டனர். கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் சிரமதானம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையருவி வி.கே.பஞ்சமூர்த்தி இல்லத்தின்

# திருமண விருந்துபசார அழைப்பு

## Wedding Reception



கோண்டாவில்
நாதஸ்வர மேதை
V.கோதண்டபாணி
தம்பதியரின் பேரனும்
நாதஸ்வர
இசையருவி
V.K.பஞ்சமூர்த்தி
தம்பதியரின்
ஏக புத்திரனுமாகிய
திருநிறை செல்வன்
**குமரேஸ்**
அவர்களுக்கும்

சாவகச்சேரி
நாதஸ்வர அரசு
S.S.அப்புலிங்கம்
தம்பதியரின்
பேர்த்தியும்,
தவில் வித்துவான்
இசையருவி
A.சந்திரமோகன்
தம்பதியரின் சிரேஷ்ட
புத்திரியுமான
திருநிறை செல்வி
**தர்சிகா**
அவர்களுக்கும்

இந்தியாவில் 23.04.2009இல் நடைபெற்ற திருமண வைபவத்திற்கான விருந்துபசார நிகழ்வு நாளை (15.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு **நல்லூர் சட்டநாதர் வீதி, இளங்கலைஞர்** மண்டபத்தில் நடைபெறும். இவ்விருந்துபசாரத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் உறவினர், நண்பர்கள், பெரியோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை விரும்பும்:**

திரு.திருமதி V.K.பஞ்சமூர்த்தி (நாதஸ்வரம்),
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

திரு.திருமதி A.சந்திரமோகன் (தவில்),
சங்கத்தானை, சாவகச்சேரி.

(இவ் வழைப்பை இரு வீட்டார் அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்).

(சி/558553)

## ஆங்கிலப் பாடநெறி

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நான்கு மாதகால விசேட ஆங்கில சான்றிதழ் பாடநெறி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இல.22, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முன்பள்ளிப் பாலர்களுக்கு ஆங்கிலமொழித் தேர்ச்சிக்களான ஆங்கில உச்சரிப்பு, வாசிப்பு, எழுத்து, பேச்சு, அபிநயப் பாடல்கள், நாடகம், கதைகூறல், களச் செயற்பாடுகள் ஆகியவற்றை முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கற்பிப்பதற்காக மேற்படி பாடநெறி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பாடநெறியைக் கற்க ஆர்வமுள்ளோர் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் பா.தனபாலன் அறிவித்துள்ளார். (201)

## பஜனை

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய அகண்ட நாம பஜனை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி அன்றைய தினம் மாலை வரை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (201)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1086 நீலம்

வெற்றி இலக்கங்கள்

03 04 24 48

மேடம்

12-05-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 208,586 | 20/- | 4,171,720/- |
| 2 இலக்கங்கள் | 19,161 | 40/- | 766,440/- |
| 1 இல. + லக்கினம் | 18,867 | 60/- | 1,132,020/- |
| 2 இல. + லக்கினம் | 1,698 | 200/- | 339,600/- |
| 3 இலக்கங்கள் | 515 | 1000/- | 515,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 7,964,780/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 248,879 | | 8,464,780/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,931,400/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மத்துகம | 400122882-3-42 |
| பதுளை | 400131337-7-23 |
| கம்பஹா | 400132236-9-08 |
| அம்பாறை | 400130224-4-26 |
| கண்டி | 400134574-4-42 |


# புளோரன்ஸ் நைற்றிங்கேல் வாக்குறுதியும் தாதிய வாழ்வும்

இன்றைய இலகிலே முன்னைய சமுதாய தலைமுறைகளோடு ஒப்பிடுகின்றபோது தற்கால சமுக அமைப்பில் மனிதர்கள் மனோரீதியான பாதிப்புக்களை அதிகம் எதிர்கொள்ள நேரிடுகின்றது. இதற்கான ஏதுக்களான யுத்தங்கள், இடப்பெயர்வுகள், மனித உறவு நிலைகளுக்குள் ஏற்படும் சிக்கல்கள், தவறான புரிதல்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். புறரீதியான முழுமை பெற்றவனாகக் காணப்படும் ஒரு மனிதன் அகத்தளவு சிதைவுகளோடும், உடைவுகளோடும் காணப்படுவானாயின் அவனை ஒரு முழுநிறைவுள்ள மனிதனாக பார்த்தல் என்பது பொய்த்துப் போகிறது. சுகதேகி என ஒருவரைக் கூறுவதாயின் அவர் பின்வரும் தன்மைகளை உள்ளீந்தவராக இருத்தல்வேண்டும். என உலக சுகாதார ஸ்தாபனத்தில் (WHO) ஒரு மாநாட்டுத் தீர்மானம் வரையறுக்கிறது. அதாவது ஒருவர் சுகநலமுள்ள முழுமையானவர் எனில் அந் நபர் உடல், உள, சமுக, ஆத்மீக நிலையில் நன்னிலையில் இருக்கவேண்டும்.

இந்த வகையில் இற்றைக்கு 18 தசாப்தங் களுக்கு முன்பு தாதியத்துக்கு வரையறை வகுத்து உலகில் உயர்வு பெறச் செய்ய வென்று அவதரித்த புளோரன்ஸ் நைற்றிங் கேல் அம்மையாரையும் அவரது சேவைகளையும் எடுத்தியம்புவதே இந்நாளில் பொருத்தமாக அமையும் எனக் கருதுகிறேன். இன்றைய காலகட்டத்தில் பல்வேறு விதமான நிலமைகளினால் ஏற்படும் நோய் நிலைமைகளும் காயங்கள் ஏற்பட்டு உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் தமக்கான பராமரிப்பைப் பெறுவதற்கும், சிகிச்சை அளிப்பதற்குமாக வைத்தியசாலைகளையும், வைத்திய நிபுணர்களையும், வைத்தியர்களையும், தாதியர்களையும் நாடிச்செல்கின்றனர்.

தாதியம் என்பது தனிப்பட்ட ஒருவரின் சுகத்தைப் பேணி உயர்வடையச் செய்யவும், நோய்கள் வராது பாதுகாக்கவும், நோய் வந்த போது அதில் இருந்து குணம் பெறவும் சிகிச்சையின் பின்பு மீண்டும் பழைய நிலையை அடையவும், சுகாதாரக் கல்வியைப் புகட்டவும், தாதியானவர் தனியாகக் கடமைபுரியாமல் நோயாளியை மையமாக வைத்தே கடமைபுரிகிறார். இதைச் செய்வதற்குத் தாதி நோயாளியுடனும் மற்றைய சுகாதாரக் குழுக்களுடனும் நல்லதோர் உறவு முறையைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். இதற்கும் தன்னுடைய நடத்தையை மாற்றுவதற்கும் விளங்கி முற்படுகிறாள்.

விஞ்ஞான மயமானதும் கணணி மயமாக்கப்பட்டதுமான தற்காலத்தில் பிரதானமாகத் தாதியருக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது எனில் இத்தகு தனித்துவமான தாதியம் ஆனது 1820ஆம் ஆண்டு வைகாசி 12ஆம் நாள் வில்லியம் எட் வேட் தம்பதியினருக்கு 2ஆவது மகளாக புளோரன்ஸ் நைற்றிங்கேல் பிறந்தார். இத்தாலியிலுள்ள புளோரன்ஸ் என்ற இடத்தில் பிறந்தமையால் அந்நகரின் பெயரே இவருக்குச் சூட்டப்பட்டது.

மருத்துவ துறை சிறந்திட
மனித வாழ்வில் ஒளியேற்ற
புளோரன்ஸ் நகரத்தின்
பார் புகழும் பெண்மணியாய்
வில்லியம் எட்வேட்டின் புதல்வியாக
வைகாசித் திங்களிலே வந்த
பன்னிரண்டாம் நாளிலே –தாதிய
உதயத்தின் தாரகையாய்
உயர்ந்தெண்ணம் கொண்டவளாய்
தரணியிலே உதித்தவள் தான்
தாதியத்தின் விளக்கேந்திய பெருமாட்டி
பணியொன்றே சுவாசமாக
பிணிதீர்க்கும் சேவை செய்து
இளவயதின் தளிர் நடையின்
இள மயில் எண்ணங் கொண்டு
மக்களின் மனங்களிலே
மாதின் புகழ் மெட்டுக்களாய்
துயர் துடைத்த தூயவளே
கருணையுள்ளம் கொண்ட –எங்கள்
புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார்.

இவ்வாறு சமூக மக்களதும் அவர்களது நோய்நிலைகளில் அம்மையார் காட்டித் தந்த உன்னதமான நெறியில் எமது சேவையினைத் தொடர்ந்து நிற்போம் என்று உறுதிபட எடுத்தியம்புகிறோம்.

எஸ்.எம்.பிரியங்கா, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



யா/கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயத்தின் அதிபர்
திரு.சு.இராசலிங்கம் அவர்களின்
பாசமிகு தாய்
திருமதி **தங்கம்மா சுப்பிரமணியம்**
அவர்கள் இறைபதம் எய்திய செய்திகேட்டு
எமது கண்ணீரஞ்சலியைக்
காணிக்கையாக்குவதோடு, அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்.
நல்லூர்க் கோட்டம்.
(85243)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சூசை ஆரோக்கியநாதன்

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 29.11.1942 | 14.04.2009 |

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டிப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.
(85244)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.01.1918 | 24.04.2008 |

**திருமதி கார்த்திகேசு கனகாம்பிகை**

திதி: பஞ்சமி

அன்புள்ளம் கொண்ட தாயே- நீங்கள்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்- உங்கள்
அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும்
எப்படி மறப்போம்- உங்கள்
ஆத்மா சாந்தியடைய வேலக்கை முருகனை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
(85240)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

28.04.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி **சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்** அவர்களின்

ஓராண்டு நிறைவை முன்னிட்டு நாளை (15.05.2009) வெள்ளிக்கிழமை **நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில்** நடைபெறும் அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**லிங்கம் களஞ்சியம்,**
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
(சி/558580)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இடம்பெறும் தாக்குதல்களால் சிறுவர்கள் பாரிய விளைவுகளைச் சந்திப்பர்

## யுனிசெவ் எச்சரிக்கை

கொழும்பு,மே14

வன்னியில் இடம்பெற்ற தாக்குதல்களில் சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டுள்ள நிலையில், இந்தப் போரினால் சிறுவர்கள் பாரிய ஆபத்தான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என 'யுனிசெவ்' அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில் 50 ஆயிரம் பொது மக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் அரச படைகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்குள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவும் இல்லை என்றால் மேலும் பெரும் தொகையான சிறுவர்கள் கொல்லப்படுவார்கள் எனவும் 'யுனிசெவ்' அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்தியப் பணிப்பாளர் டதனியல் ரூல் எச்சரித்திருக்கின்றார்.

இந்த வருட தொடக்கத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில் பெரும் தொகையான சிறுவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஐ.நா. மற்றும் ஏனைய மனிதநேய அமைப்புக்களின் மதிப்பீடுகளின்படி கடந்த ஐந்து மாத காலத்தில் மட்டும் 10 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக உலகம் நெருக்கமாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது என ஐ.நா. செயலாளர் நாயகம் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார். இங்கு இடம்பெற்றிருக்கும் பிந்திய போர் சிறுவர்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றது எனவும் [illegible]க்காட்டியிருக்கின்றார்.

அரச படை தன்னுடைய படை நடவடிக்கைகளின்போது பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் மீண்டும் வலியுறுத்தியிருக்கும் 'யுனிசெவ்' அமைப்பு, தீவிரமான போர் இடம்பெறும் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறுவதற்கு அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.

போர்ப் பகுதிகளுக்குள் உள்ள மக்களின் ஆபத்தான வாழ்க்கை நிலை தொடர்பாகவும் 'யுனிசெவ்' எச்சரித்திருக்கின்றது. இங்கு மருந்து, உணவுப் பொருள்களுக்கும் சுத்தமான குடிதண்ணீருக்கும் காணப்படும் தட்டுப்பாடு மக்களுடைய அவல நிலைமையை மேலும் மோசமாக்குகின்றது எனவும் 'யுனிசெவ்'வின் பிராந்தியப் பணிப்பாளர் எச்சரித்துள்ளார். (சி)

## ஐ.நா. பேச்சாளர் மீது ஒழு[ங்காற்று] நடவடிக்கை எடுக்க வேண்டு[ம்]

### அரச அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு,மே14

இலங்கையில் இரத்தக் களரி நிலை காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பிற்கு பேச்சாளர் கோல்டன் வைஸ்[illegible] ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரசார நடவடிக்கையினால் அவர் தவறாக வழிநடத்தப்பட்டார் என அந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (சி)

## வேலணை ப.நோ.கூ.ச கிளைக்குழுத் தேர்தல்

நல்லூர்,மே14

வேலணை பல நோ.கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

மேற்படி சங்கத்தின் 15 கிளை நிலையங்களுக்குமான நிர்வாக உறுப்பி[னர்கள்] இதில் தெரிவுசெய்யப்படுவார்கள். (203-111)

## கூட்டுறவுப் பணியாளர் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையால் கடந்த 2008இல் நடத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்தரப் பயிற்சிநெறியின் இறுதிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இதில் இரண்டாம் பிரிவில் ஆறு பேரும், மூன்றாம் பிரிவில் இரண்டு பேரும், நூதன பிரிவில் ஒருவருமாக மொத்தம் ஒன்பது பேர் சித்தி பெற்றுள்ளனர்.

சித்தி பெற்றோரின் விவரம் வருமாறு:

*இரண்டாம் பிரிவு* - த.கமலநாதன், யோ.தெய்வேந்திரன், திருமதி த.ஜெகதீஸ்வரி, செ.ஜெகநாதன், கு.ஜெனசி, அ.வசிகரன்,

*மூன்றாம் பிரிவில்* - க.நிலானி, திருமதி வி.மாலினி, சி.சிவானந்தம்,

*நூதன பிரிவில்* - ம.சுரேஸ்.

சித்தி பெற்றவர்களின் விவரங்கள் மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு வந்து சேர்ந்துள்ளன. (203-224)

## முள்ளிவாய்க்கால் பகுதியில் பீரங்கித் தாக்குதலை நிறுத்துக!

### ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு,மே14

''முள்ளிவாய்க்கால் பகுதி மீது மேற்கொள்ளப்படும் பீரங்கி தாக்குதல்களை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஜனாபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

நேற்றுமுன்தினம்7.45 மணியளவில் முள்ளிவாய்கால் அரச வைத்தியசாலையில் பீரங்கிகள் விழுந்து வெடித்ததன் காரணமாக 26 நோயாளிகள் உயிரிழந்தனர். சில நிமிடங்களின் பின் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 100 பேருக்கும் மேல் படுகாயமுற்றுள்ளார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

பீதியுடன் வாழும் மக்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட பீரங்கி தாக்குதலை தாங்கள் தலையிட்டு உடன் நிறுத்துமாறு கேட்டுகொள்கின்றேன். வேறு சம்பவங்களிலும் படுகாயமுற்ற ஏனையோருடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் 2 நாள்களுக்கு மேலாக இதுவரை எதுவித சிகிச்சையும் பெறாமல் இருப்பதனால் உடனடியாக வைத்திய குழுவைத் தயவுசெய்து அனுப்பிவைக்கவும்.

இச்சம்பவம் விடுதலைப் புலிகளினால் தான் ஏற்பட்டிருந்தாலும் மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்- என்றுள்ளது. (சி)

## கட்சியிலிருந்து நீக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவின் மனு ஏற்பு

கொழும்பு,மே14

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி அரசுடன் இணைந்த ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவை அக்கட்சியில் இருந்தோ அல்லது எம்.பி. பதவியில் இருந்தோ நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

அமைச்சர் யாப்பா தாக்கல் செய்திருந்த மனுவொன்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிபதி சம்பத் விஜயரட்ணவே இம்மாதம் 25 ஆம் திகதி வரையில் நடைமுறையில் இருக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

அமைச்சர் யாப்பா தாக்கல் செய்திருந்த அந்த மனுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்படப் பலர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் உள்ள சில சரத்துக்கள் சட்டவிரோதமானவை என்று இதற்கு முன்னர் பல தடவைகள் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளபோதிலும் அதே சரத்துக்களை அடிப்படையாகக் கொண்டு என்னைக் கட்சியில் இருந்தும் எம்.பி. பதவியில் இருந்தும் நீக்குவதற்கு அக்கட்சி நடவடிக்கை எடுப்பது சட்ட விரோதமானது என்று யாப்பா அவரது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இயற்கை நீதியைப் புறக்கணிக்கும் வகையில் எதுவித நீதியான விசாரணைகளுமின்றி என்னைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முடிவு நாட்டின் அரச யாப்புக்கு முரணானது என்று யாப்பா அந்த மனுவில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் சம்பத் விஜயரட்ண மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (சி)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டம் அண்மையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உரையாற்றுவதையும், அருகில் சங்கத் தலைவர் மு.நாகேந்திரராசா, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ.பரமேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களை இரண்டாவது படத்தில் காணலாம். *(207)*

## எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது; குருமாற்றம் ஆட்சியிலும் மாற்றம் ஏற்படுத்தும்!

புதுடில்லி,மே14

நாடாளுமன்றத் தேர்தலில் எந்த கட்சி ஆட்சியைப் படிக்கும்? பிரதமராகப் பதவி ஏற்கப் போவது யார்? என்ற எதிர்பார்ப்பு நாடெங்கும் எழுந்துள்ளது. வரும் 16ஆம் திகதி (சனிக்கிழமை) இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்க உள்ளது. அன்று மதியமே புதிய ஆட்சி யார் கைக்கு போகும் என்பது தெரிந்து விடும்.

தேர்தல் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் எல்லாம் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் கிடைக்காது என்று கூறி உள்ளன. வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு மாநிலக் கட்சிகள் அணி மாறுவதைப் பொறுத்தே புதிய ஆட்சி அமையும் என்று அரசியல் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இந்த நிலையில் ஜோதிடர்கள் பலர் புதிய ஆட்சி பற்றிய தங்கள் கணிப்பை வெளியிட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் கிடைக்காது என்று கூறி உள்ளனர். அதோடு எதிர்பாராத புதிய ஆட்சி அமையும் என்கிறார்கள்.

குருமாற்றமும் ஆட்சி மாற்றமும்

டெல்லியைச் சேர்ந்த பிரபல ஜோதிடர் முகேஷ் ஜெயின் கூறியிருப்பதாவது:-

குருபகவான் வழக்கமாக 13 மாதங்களுக்கு ஒரு தடவை ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு விஜயம் செய்வார். 30 ஆண்டுக்கு ஒரு தடவை அவரது இந்தப் பயணத்தில் சிறு மாற்றம் ஏற்படும். அந்த மாற்றம் தற்போது வரவுள்ளது.

அதாவது குருபகவான் மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குச் செல்லவுள்ளார். இது இந்தியாவின் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு மிக, மிக உதவியாக இருக்கும். ஆனால் அதன் பிறகு குருபகவானிடம் ஏற்படும் மாற்றங்கள் இந்திய அரசியலை ஆட்டிப்படைத்துவிடும்.

பொதுவாக குருபகவான் மிகவும் வலுவானவர். அதனால்தான் குருபார்க்க கோடி நன்மை என்று சொல்கிறோம். ஆனால் மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குச் செல்லும் குருபகவான், 5 மாதங்களில் மீண்டும் மகர ராசிக்கே வர உள்ளார்.

கும்ப ராசியில் குரு 2 மாதங்கள் மட்டுமே இருப்பார். அந்தச் சமயத்தில் நல்லதே நடக்கும். ஆனால் மகர ராசிக்குத் திரும்பிய பிறகு குரு பலம் இழந்து விடுவார். இதனால் புதிய ஆட்சியில் சலசலப்பு தோன்றும்.

மகர ராசியில் குருபகவான் [illegible] சஞ்சரிக்கும் நிலையில் புதிய ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும். இதற்கான அபாய சூழ்நிலை ஓகஸ்ட் மாதமே தொடங்கிவிடும். இதையடுத்து 1 1/2 ஆண்டுகளில் ஆட்சி கவிழ்ந்துவிடும்.

நாடாளுமன்றத்துக்கு மீண்டும் உடனடியாகத் தேர்தல் நடத்துவது தவிர்க்க முடியாததாகி விடும். 2010ஆம் ஆண்டு இறுதியிலோ அல்லது 2011ஆம் ஆண்டு தொடக்கத்திலோ நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெற வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு ஜோதிடர் முகேஷ் ஜெயின் கூறினார்.

### இந்தியத் தேர்தல் முடிவுகள் பற்றி ஜோதிடர்களின் ஆருடம் இது

மன்மோகனுக்கு ஏழரை நடக்கிறது

ஜோதிடர் அசோக் வாசுதேவ் கூறியதாவது:-

எந்தக் கட்சிக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்காது. காங்கிரஸ் அல்லது பா.ஜ.க. ஆதரவுடன் 3ஆவது ஆட்சி அமைக்கும். இந்தியாவின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் புதிய பிரதமராக பதவி ஏற்க வாய்ப்புள்ளது.

மன்மோகன்சிங்குக்குத் தற்போது 7 1/2 நாட்டுச் சனி திசை நடக்கிறது. வரும் செப்ரெம்பர் மாதம் அது முடிகிறது. 7 1/2 ஆண்டு சனியில் மன்மோகன்சிங் ஏற்கனவே உச்சக் கட்ட நன்மைகளைப் பெற்றுவிட்டார். இனி அவருக்கு பிரதமர் சுகம் கிடைக்க வாய்ப்பு இல்லை.

அத்வானிக்கும் வாய்ப்பில்லை

அத்வானி ஜாதகத்தில் அவர் பிரதமர் பதவி ஏற்கும் அளவுக்கு சூழ்நிலை எதுவும் இல்லை. எனவே அவர் ஒரு போதும் பிரதமராக இயலாது.

இவ்வாறு ஜோதிடர் அசோக் வாசுதேவ் கூறினார்.

நவீன் கன்னா என்ற ஜோதிடர் கூறுகையில், குரு பகவானிடம் ஏற்படும் மாற்றம் காரணமாக பிரணாப் முகர்ஜிக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். எதிர்கால அரசியலில் அவர் சிறப்பான பணிகளை மேற்கொள்வார்.

குஜராத் முதல்-மந்திரி நரேந்திர மோடிக்கு 2012ஆம் ஆண்டு மிக, மிக உச்சமான ஆண்டாகும். வலுவான ஜாதக அமைப்புக் கொண்ட அவர் உயர் பதவிக்கு வருவதை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது என்றார்.

ஜோதிடர் விவேக் சோப்ரா கூறுகையில், புதிய ஆட்சியை அமைப்பதில் பெண்கள் கிங்மேக்கர்களாக இருப்பார்கள். குருபகவான் பலம் இழக்கும்போது, பெண் தலைவர்களும் பலம் இழப்பார்கள். மாநிலக் கட்சிகளின் அதிகாரங்கள் மறையும். 2010க்கு பிறகு நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடக்கும். அதன் பிறகு நிலையான ஆட்சி ஏற்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில்
### மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

**01. பின்வரும் பந்தியை வாசிக்குக.**

அதிகாலையில் நாம் பறவைகளின் ஒலிகளைக் கேட்கிறோம். அவ்வொலிகள் எல்லோரையும் உற்சாகப்படுத்துகின்றன. சூரியஒளி இப்பூமியைப் பிரகாசமடையச் செய்கின்றது. மரம், செடிகளில் உள்ள பனித்துளிகள் மீது சூரியஒளிபடுகின்றது. அவை வெள்ளிமணிகள் போல் ஒளிர்கின்றன. அழகிய வண்ணத்துப்பூச்சிகளும், சிட்டுக்குருவிகளும் ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன. இவை எல்லாம் இயற்கையின் கொடைகள், இவற்றைப் படைத்தவர் யார்? அவை யாவும் இறைவன் படைப்புகளாகும்.

* இப்பந்தியை பயன்படுத்தி 01 தொடக்கம் 08 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

01. ''அருந்துகின்றன'' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக.

..................................................

02. ''பிரகாசம்'' என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.

..................................................

03. பந்தியில் வெள்ளிமணிகள் எதற்கு உவமானமாகச் சொல்லப்படுகின்றது?

..................................................

04. வண்டுகள் ரீங்காரம் செய்வதுபோல் ஆந்தை

..................................................

05. ''பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன'' என்பதை ஒருமையில் எழுதுக.

..................................................

06. பந்தியிலுள்ள உயர்திணை, நிகழ்கால, பன்மை வினைமுற்றுச்சொல் ஒன்று தருக.

..................................................

07. இறைவனின் படைப்புக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

..................................................

08. அம்மலர்களில் அழகிய வண்ணத்துப்பூச்சிகளும், சிட்டுக்குருவிகளும், ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன.
   1) இவ்வாக்கியத்திலுள்ள பெயரடைச்சொல் ஒன்று தருக.
   ..................................................
   2) இவ்வாக்கியத்திலுள்ள வினையடைச்சொல் ஒன்று தருக.
   ..................................................

* பின்வரும் சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

09. கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல்.

..................................................

10. ஒன்றின் இயல்பை அறியும்முன் அதனை செய்யத் தொடங்காதே.

..................................................

11. அடைப்பில் உள்ள எழுத்துக்களில் பொருத்தமான எழுத்தை தெரிவுசெய்து சொற்களைப் பூரணப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| ரி | றி | லி | ழி | ளி |

1) வெ .................. ச்சம் 2) அ .................. விப்பு

3) தொ .................. ல் 4) மண்ண .................. ப்பு

12. பொருத்தமான நிறுத்தக்குறியீட்டை இடுக.
நான் என்ன குறைந்தவனா ..................................

13. பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
வித்தையை கற்பித்த குருவிற்கு மாணவர்களால் வழங்கப்படும் காணிக்கை.

..................................................

14. சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமான வாக்கியமாக எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜப்பானில் | மிக | உள்ளது | உலகிலே | சுரங்கப்பாதை | நீளமான |

..................................................

15. பின்வரும் பேச்சுவழக்கு நடைமுறையை எழுத்து வழக்கு நடைமுறையாக மாற்றி எழுதுக.
நான் வீட்டை போட்டு வாறன்.

..................................................

16. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.

Fix the nail with .................................. (axe, hammer, knife)

17. வானவில் என்பதன் ஆங்கிலச்சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

..................................................


18. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

Please close the door ..................................

19. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
நீங்கள் எங்கே போகின்றீர்கள்?

..................................................

20. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சிங்களச்சொல்லை தமிழில் எழுதுக.




1) .................................. 2) ..................................
3) ..................................

21. இதன் கருத்தை தமிழில் எழுதுக.
சுபதினக் வேவா ..................................

* **22 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

22. எல்லாக்காலங்களிலும் பூக்கும் பூ,
1) வேம்பு 2) கார்த்திகைப்பூ. 3) குறிஞ்சிப்பூ. 4) லில்லிப்பூ

23. மிகச்சிறிய இலைகளை உடைய தாவரம்,
1) விடத்தல். 2) புளி. 3) கீழ்காய் நெல்லி. 4) பொன்னவரை.

24. மனிதனின் சிறு நீரகத்தின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள வித்து,
1) பாகல். 2) உழுந்து. 3) போஞ்சி. 4) புலிநகம்.

25. இலைகளிற்கு தீங்கு விளைவிக்கும் பிராணி,
1) குளவி. 2) ஈசல். 3) கறையான். 4) நத்தை.

26. மேல்வாய் பற்களற்ற பிராணி,
1) மாடு. 2) ஆடு. 3) குதிரை. 4) குரங்கு.

27. நத்தைகளை உண்ணும் பிராணி,
1) பாம்பு. 2) எலி. 3) செண்பகம். 4) கரடி.

28. இரவில் நடமாடும் பிராணி,
1) மான். 2) கரடி. 3) ஆட்காட்டி. 4) பருந்து.

29. சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளாத பிராணி,
1) குளவி. 2) பச்சோந்தி. 3) ஓணான். 4) வெட்டுக்கிளி.

30. குரக்கனை மாவாக அரைக்க உதவும் உபகரணம்.




1) 2) 3) 4)

31. பொதி செய்யப்பட்ட பொருட்களின் அட்டையில் கீழ்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து,
1) எப்போதும் மேல் நோக்க வைக்க வேண்டும்.
2) உடையக்கூடிய பொருட்கள்.
3) வெப்பமான இடத்தை தவிர்க்கவும்.
4) ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்.




32. நிறக்கடதாசியை சிறுசிறு துண்டுகளாக கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம்,
1) அல்பனா. 2) கோலவுரு. 3) கொலாஜ் 4) சிற்பம்.

33. படத்திலுள்ள உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர்,
1) பெருங்கரடி. 2) சிறுகரடி.
3) விருட்சியம். 4) சிம்மம்.




34. கீழ்வருவனவற்றில் காந்தம் பயன்படும் உபகரணம்,
1) ஊசிதுளைக்கமரா. 2) பம்பரவண்டி. 3) திசைகாட்டி. 4) மழைமானி.

35. வட்டவடிவமான மேசைவிரிப்பின் ஓரத்தை அழகுபடுத்தும் தையல் உரு.



1) 2) 3) 4)

36. தேசியக்கொடி ஏற்றும்போது இசைக்கப்படும் இசைக்கருவி.



1) 2) 3) 4)

37. இலங்கையின் செய்மதி தகவல் தொடர்பு நிலையம் அமைந்துள்ள இடம்,
1) வட்டவளை. 2) பாதுக்கை. 3) கொழும்பு. 4) கண்டி.

38. சார்க் அமைப்பில் உள்ளடங்காத நாடு,
1) இலங்கை. 2) இந்தியா. 3) பூட்டான். 4) மியான்மார்.

39. இக்குறியீடு குறிக்கும் அரச நிறுவனம்,
1) தேசிய நீர் வடிகால் அபிவிருத்தி அதிகாரசபை.
2) வீதி அபிவிருத்தி அதிகார சபை.
3) இலங்கை மின்சார சபை.
4) இலங்கைப் போக்குவரத்துசபை.




40. பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாக செய்யவேண்டிய முதலுதவி,
1) சவுக்காரம் இட்டுக் கழுவுதல். 2) கடிவாயை துணியினால் இறுக்கிக் கட்டுதல்.
3) காயத்தின் மீது எண்ணெய் பூசுதல். 4) நோயாளியை நித்திரை கொள்ளச்செய்தல்.

* இலங்கையின் வரலாற்று கலைத்துவ படைப்புகள் இரண்டு கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.

41.



..................................

42.



..................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இலங்கையின் இரு பிரசித்தி பெற்ற விளையாட்டு கீழே காணப்படுகின்றது. அவற்றின் பெயர்களை எழுதுக.

43.  ....................................

44.  ....................................

45. இரு உலர் மின்கலங்களும் ஒரு கடிகாரமும் காணப்படுகின்றன. கடிகாரத்தை இயங்கச் செய்வதற்கு உலர் மின்கலங்களை பொருத்தப்படும் விதத்தை கடிகாரத்தில் வரைந்து காட்டுக.




46. வாரத்தில் முதல் நான்கு நாட்களில் ஒரு வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாட்கள் | குழந்தைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| திங்கள் | 80 | 40 |
| செவ்வாய் | 70 | 62 |
| புதன் | 85 | 78 |
| வியாழன் | 105 | 45 |

1) அதிகமான குழந்தைகள் பிறந்த தினம் யாது?
....................................


2) நான்கு நாட்களிலும் பிறந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை யாது?
....................................

3) வியாழக்கிழமை பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ....................................

4) நான்கு நாட்களிலும் பிறந்த ஆண் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் யாது?

....................................................

**30m நீளமான பாலத்தின் வழியே பேருந்து பயணம் செய்வது உருவில் காட்டப்பட்டுள்ளன.**





47. பேருந்தின் நீளம் யாது? .................................. m

48. அது பாலத்தினைக்கடக்க இன்னும் செல்லவேண்டிய தூரம் யாது?.................................. m

49. 10 நிமிடங்கள் முந்திக்காட்டும் எனது கடிகாரம் 7.55 காட்டியபோது நான் அலுவலகத்திற்கு பிரயாணம்செய்யும் புகையிரதம், புகையிரத நிலையத்தை சென்றடைந்தது. அன்றைய தினம் புகையிரதம் 22 நிமிடங்கள் பிந்திச்சென்றது. புகையிரதம் சாதாரணமாக புகையிரத நிலையத்தை வந்தடைய வேண்டிய சரியான நேரம் யாது?

....................................................


50. கடிகாரம் Aஇன் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் Bஇன் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக.





51. 1500ml நீரை வெளியேற்ற 100ml கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் எடுத்து வெளியேற்ற வேண்டும்?

52. கூட்டுக. $\frac{1}{4} + \frac{2}{8} =$ ........................

53. உருவில் நிழற்றப்படாத பகுதியை தசமதானத்தில் தருக.
....................................



54. தரப்பட்ட உருவில் சிறிய சதுரங்களின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும்.



1) உருவின் சுற்றளவு ...................... cm

2) பெரிய சதுரத்தின் பரப்பளவு ...................... $cm^2$ *

**பின்வரும் பந்தியை வாசிக்குக.**

சரவணன் ''பப்பி'' என்ற நாயை வளர்த்து வந்தான். அது ஒரு நாள் மூன்று குட்டிகளை ஈன்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். பார்த்துக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு அழகு! ........ நீர் சரவணன் எனின், இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். இவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

55 ..............................................................................

56. ..............................................................................

57. ..............................................................................


58. ..............................................................................

59. ..............................................................................

60. ..............................................................................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 13 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## தயார்படுத்தல் பரீட்சை -12, பகுதி-1 இன் விடைக்குறிப்புகள்

01 - 3 02 - 2 03 - 4 04 - 3 05 - 3 06 - 1 07 - 1 08 - 1 09 - 2
10 - 1 11 - 3 12 - 1 13 - 1 14 - 1 15 - 1 16 - 1 17 - 1 18 - 1
19 - 1 20 - 3 21 - 1 22 - 3 23 - 1 24 - 1 25 - 3 26 - 2 27 - 1
28 - 1 29 -  30 - 24 கம்பங்கள் 31 - $9cm^2$ 32 - 7cm 33 - 1989ஆம் ஆண்டு
34 - 2 மணித்தியாலம் 30 நிமிடம் 35 - 5 மணித்தியாலம்
36 - 4400kg 400kg


**எதிர்வரும் வியாழக்கிழமை கண்டி மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.S.சுரேஸ்குமார் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-13 இன் பகுதி 1 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

**ஆக்கம்:-ஆசிரியர்கள் திரு.T.திலீப்குமார் & திரு. T. மன்மதகாந்தன்.**
**கொழும்பு விவேகானந்தா கல்லூரி.**

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-4273035.



கொக்குவில் இந்து முன்பள்ளியின் கால்கோள் விழாவில் புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் பாண்ட் வாத்தியங்களுடன் அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*




மனிதநேயக் கூட்டமைப்பு நிறுவனத்தினால் 'மனிதாபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம்' எனுந் தலைப்பில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இணுவில் மத்திய கல்லூரி மாணவி செல்வி சிந்து சிவபாலனுக்கு, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பரிசில் வழங்குவதைக் காணலாம். இவருக்கு பரிசுப் பொதியும், 7500 ரூபா பணமும் வழங்கப்பட்டது. (55)



வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் பிரதேச சபையுடன் இணைந்து நடத்திய முன்பள்ளி மாணவர்களின் இறைவணக்கம் ஓதல் திறனில் பங்குபற்றிய மாணவர்களுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் பிரதேசசபை உத்தியோ[illegible] படத்தில் காணப்படுகின்றனர். (88)



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தீவகக் கல்வி வலயக் கணக்காளர் எஸ்.பரதன் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஆஸ்திரேலியா வலியுறுத்துகிறது

கொழும்பு, மே 14

இலங்கையில் தற்காலிக யுத்த நிறுத்தமொன்று அமுல்படுத்தப்பட வேண்டும் என ஆஸ்திரேலியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பாவி பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் இந்தத் தற்காலிக யுத்த நிறுத்தம் அமையும் என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

யுத்த வலயத்தில் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதாகவும், இந்தப் படுகொலைகளின் பொறுப்பை அரசும் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் சுமத்தி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வார இறுதியில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதல்களில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியானதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பை கருத்திற் கொண்டு அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாக தற்காலிக யுத்த நிறுத்தமொன்றை அமுல்படுத்த வேண்டும் என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பட்டுள்ளார்.

இலங்கையில் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவித்து ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

(சி)

## நெதர்லாந்திலும் இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டது

ஹெய்க், மே 14

நெதர்லாந்து தலைநகர் ஹெய்க்கில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் திங்களன்று தாக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களே இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

அலுவலக ஜன்னல்களை அடித்து நொறுக்கிச் சேதம் ஏற்படுத்தப்பட்டது என்றும் தாக்குதலை அடுத்து பொலிஸார் தூதரகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சிலவாரங்களுக்கு முன்னர் நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டிருந்தது என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-1)

## அல்லைப்பிட்டியில் கூட்டுறவு நகர்

நல்லூர், மே 14

அல்லைப்பிட்டியில் 18 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிகள் கொண்ட கூட்டுறவு நகருக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.


இதற்கென 'கமநெகும' திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாவும் வேலணை ப.நோ.கூ.சங்கத்தால் 8 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவுநகர் கடை ஒன்று மண்டைதீவிலும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-111)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு 06.04.1943



உதிர்வு 15.04.2009

**அமரர் அருணாசலம் வேலுப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற அதிபர், மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், நாவற்காடு கணபதி வித்தியாலயம்)

கடந்த (15.04.2009) அன்று இறைபதம் எய்திய எங்கள் குடும்ப விளக்கின் இழப்பின் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

இன்று (14.05.2009) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு, மீசாலை. (85238) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தவனம் குணலிங்கம்**


தோற்றம் 15.12.1944 | திதி: பஞ்சமி | மறைவு 25.04.2008

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அவனியில் பெருமகனாய்
எமதுள்ளத்தில் நிலை பெற்ற இதயத் தெய்வமே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாப்பயணம் சென்றாயோ
இப்புவியில் நாம் உள்ளவரை எம் உள்ளங்களில்
உம் நினைவு என்றும் அழியாது நிலைத்திருக்கும்.

(85192)

கரணவாய் மத்தி, கரவெட்டி.
குடும்பத்தினர், க.நாகலிங்கம் (சகோதரன்).

## ஒன்பதாம் ஆண்டினில்



**அமரர் சின்னத்துரை விவேகானந்தன்**

(S.V.ஆனந்தன்)

மண்ணில்: 01.08.1948 விண்ணில்: 23.04.2000

திதி: 14.05.2009

வையகத்துள் மும்மூன்று ஆண்டுகள்
உங்கள் பிரிவின் இடைவெளி தந்த
நெஞ்சத்து வலிகள் ஆறிடா.....
உங்கள் சுவடுகளில் நடந்த நிகழ்வுகள்
எம் முன் நிழல்களாகி
எம் உள் பதிந்து மன எழிச்சியுடன் நாம்.....

(84997)

கோபால் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தசாமி மதுரநாயகம் (Switzerland)**

அன்னை மடியில் 05.10.1963 | ஆண்டவன் அடியில் 14.04.2009

மறைந்து விட்ட சூரியனே! மறுபடியும் உதிக்காயோ!
உதிர்ந்துவிட்ட மலர்ச்சரமே! உயிர் பெற்று வருவாயோ!
மறைந்திடுமோ உன் வதனம்
உன்னை மறந்திடுமோ எம் இதயம்
ரோஜா மலர் மணம் வீச மறுத்ததேன்
உம் புன் சிரிப்பு முகம் வாடியதேன்
உம் மனைவி பிள்ளைகளைப் பிரிந்ததேன்
உம் உடன் பிறந்தோரை மறந்ததேன்
உம் அம்மாவின் உள்ளம் கொதிக்கிறதே!
உம் அப்பா தம்பியைத் தேடித்தான் சென்றீரோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம் ரோஜா முகம் எம் நெஞ்சை விட்டு
நீங்கவே நீங்காதே.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(85220)

'ஸ்ரீ கந்தபதி', வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு, கைதடி.
தொ.பே: [illegible]4450819 (சுவிஸ்),
0[illegible]0-221-7031 (இலங்கை).

என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள், தாய்,
சகோதர, சகோதரி,
மைத்துனர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான பாடசாலை வகுப்பறைத் தொகுதி கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வகுப்பறைத் தொகுதியினை திறந்து வைப்பதையும் வகுப்பறைகளில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டிற்கு ஆயத்தம் செய்வதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். யாழ்.அரச அதிபர் உரையாற்றுவதையும் அருகில் யுனிசெவ் பிரதிநிதி ஜோன் அராக்கி, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம்.
(படங்கள் : தென்னவன்)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 14

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 'நிக்கொட்' நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம், கணனிச் செயற்பாட்டு மையம் ஆகியவை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக 'நிக்கொட்' நிறுவன செயற்பாட்டு பிரதி முகாமையாளர் சிவரூபன், பாடசாலைகள் வேலைப் பகுதி பொறியியலாளர் எஸ்.சிவபாலன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(203-207)

## கரம் போட்டிகள்

வலி வடக்கு,மே.14

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான கரம்போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அனைத்துப் போட்டியாளர்களையும் உரிய நேரத்திற்குச் சமுகம் தரும்படி வேண்டப்பட்டுள்ளது. (203-86)

# கந்த முருகேசனாரின் கலைக் கோயிலுக்கு அறியாமை இருளைப் போக்கச் சென்றனர் பல


**ஈழத்துப் பெரியார் 'தமிழ்த் தாத்தா' தென்புலோலியூர் கந்த முருகேசனாரின் நினைவு தினம் (14.05.2009) இன்றாகும். அதையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

புலோலி என்னும் ஊரே கவிபாட வல்லது போலும். புலவர் ஒலி என்பதே புலோலி என மருவிற்று என்பாரும் உள். புலோலி தமிழுக்கு உவந்தளித்த பெருந்தகைகள் பலர். ஈழநாட்டின் தலைசிறந்த தமிழ்ப் புலவரும் ஆராய்ச்சியறிஞரும், முற்போக்கு வாதியும், சிந்தனையாளருமாக விளங்கிய 'தமிழ்த் தாத்தா' மறைந்த தென்புலோலியூர் கந்த முருகேசனார் இவர்களுள் ஒருவராகத் திகழ்கிறார்.

1903ஆம் ஆண்டில் தென்புலோலியில் பிறந்த இவர் தமது இளமைக் காலத்தில் பருத்தித்துறையிலுள்ள தமிழ்ப் பாடசாலையொன்றில் 4ஆம் வகுப்பு வரையில் கல்வி கற்றார். பின்னர் புலோலி மாணவர் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து 5ஆம் வகுப்பில் ஆங்கிலம் பயின்று கொண்டிருந்த போது, குடும்பத் தொல்லைகளால் இவரது பள்ளிப்படிப்பு இடைநடுவில் தடைப்பட்டது.

அதன்பின்னர், இவரது உறவினரும் தமிழ்ப் பேரறிஞருமான உரையாசிரியர் க.க.முருகேசபிள்ளையின் அரவணைப்பிலே இவருடைய தமிழ்க்கல்வி மீண்டும் தழைத்தது. உரையாசிரியர் முருகேசபிள்ளை நன்னூல், திருக்குறள், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரிய புராணம் ஆகியவற்றை இவருக்குக் கற்பித்துக் கொடுத்தார்.

படித்தது தமிழ் நாலாம் வகுப்பு. ஆனால், பாடம் கற்றுக்கொடுத்ததோ வித்துவான் வகுப்புக்கென இலக்கண இலக்கியம் படித்தவர்களுக்கு. ஒலிமிக்க புலோலி தெற்கிலே 'தமிழகம்' என்னும் ஒரு சிறு மணற் குடிசைத் திண்ணையில் தாடியுடன் தவமுனிபோல் வீற்றிருந்து தன்னிடம் தமிழ் கற்க வரும் மாணவர்களுக்கு இலக்கியம், இலக்கணம், மதம், கணிதம், அரசியல் என பல்துறைகளிலும் பாடம் கற்றுக் கொடுத்த 'பக்குவம்' கந்தமுருகேசனார், என்ற அந்தத் தமிழறிஞரின் தனித்துவமாக அமைந்தது.



கற்றுக் கொடுத்த தாத்தா கந்த முருகேசனார் மறைந்தும் மக்கள் மனதில் மறையாது வாழ்பவர்.

இறைவனிடம் பக்தர்கள் அருள் வேண்டிச் செல்வர். அரசனிடம் குடிகள் பொருள் வேண்டிச் சென்றதுண்டு. ஆனால் தமிழறிஞர் கந்தமுருகேசனார் வாழ்ந்த கலைக் கோவிலுக்குத் தம் அறியாமை என்னும் இருளையகற்றி அறிவொளி பெருக்கிடச் சென்றோர் பலர். அவரிடம் தமிழ் கற்றறிந்து வாழ்க்கையில் பல சிறப்புக்களையும் பெற்ற நன் மாணாக்கர்கள் பிற்காலத்தில் தமது நன்றியறிதலை வெளிப்படுத்த அன்னார் உயிருடன் வாழ்ந்த வேளையில் விழாவெடுத்தும் அன்னாரைப் போற்றிப் புகழ்ந்தும் தமது நன்றியறிதலை வெளிப்படுத்தினர். அத்துடன் நில்லாது அவரது மறைவுக்குப் பின்னர் அன்னாருக்குச் சிலையெடுத்தும் ஏற்றிப் போற்றினர்.

தமிழறிஞர் கந்தமுருகேசனார் தன்னலமற்ற பண்பும், பொதுநோக்கமும், இரக்க சிந்தையும் ஒருங்கே அமையப்பெற்றவர். தமது மாணாக்கர்களிடம் ஒரு தனி அன்பு கொண்டவர். அவரிடம் அறிவுப் பிச்சை வேண்டிச் சென்றோர் எவரும் ஆண்டியாகத் திரும்பியதில்லை. தெளிந்த அறிவு பெற்று வாழ்வில் உயர் பதவிகளை ஏற்று வெற்றியுடன் வாழ்க்கையை நடத்தினர்.

'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற வாக்குக்கு ஏற்ப எல்லோரும் கல்வியில் சிறக்க வேண்டும் என்ற நோக்குடன் தன்னை நாடி வந்து தமிழ் கற்க விரும்பியோருக்கு விருப்புடன் தமிழ் கற்றுக் கொடுத்தவர் அவர். அவருடைய அங்கத்திலே குறையொன்று இருந்தது. ஆனால் அவரது அறிவில் எவராலும் குறைகாண இயலவில்லை. பரந்த நெற்றி, அறிவொழுகும் கண்கள், தமிழ் ஒளி வீசும் மலர்ந்த முகம், பாலையும் வெல்லும் வெண்ணிறத் தாடி, இதுவே அப்பேரறிஞரின் தோற்றம்.

மிகுந்த எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு பழந்தமிழ்த் தொண்டு செய்து எத்தனையோ தமிழ் அறிஞர்களுக்குத் தமிழ்

'செந்தமிழ்ச் செல்வி' 'சமூக முன்னேற்றம்' ஆகிய சஞ்சிகைகளில் தமிழறிஞர் கந்த முருகேசனார் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றில் செந்தமிழ்ச் செல்வியில் வெளியான 'தமிழர் மண முறை' மற்றும் சமூக முன்னேற்றத்தில் வெளியான 'விதிகன்மம்' ஆகிய கட்டுரைகள் அறிஞர்கள் பலராலும் விதந்துரைக்கப்பட்டவை ஆகும். 'நல்லை நாவலன் கோவை' என்ற கவிதைத் தொகுப்பும் அவரால் எழுதப்பட்டதொன்றே.

அறிஞர் கந்தமுருகேசனார் சிறப்பு வாய்ந்த குடும்பத்தில் பிறந்தாலும் புலவர்களுக்கு உரித்தான வறிய சூழ்நிலையிலேயே பிறந்தவர். இளமை தொட்டே எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனையும் முற்போக்கு எண்ணமும் கொண்டவராகத் திகழ்ந்தார். தன்னிடம் நிறைந்திருந்த தமிழறிவுச் செல்வத்தால் மாறுபட்ட கொள்கையுடையோர்கள்கூட மதிக்கும் வண்ணம் வாழ்ந்தவர்.

பிற்காலத்தில் வாழ்வில் குறைவின்றி வாழ்ந்தபோதிலும் இவர் நோயினால் வருந்த நேர்ந்ததுண்டு. பிரமச்சரியத்தைக் கடைக்கொண்டு வாழ்ந்து வந்த இவருக்கு இவரது கடைசிக்காலத்தில் முன்னர் இவரிடம் கற்றுயர்ந்த மாணவர்களில் பலர் பல வழிகளில் உறுதுணையாயிருந்து உதவினர்.

இவர் தமது 62ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நிழலில் இணைந்துகொண்டபோதிலும் தமிழுக்குத் தாம் ஆற்றிய பெரும்பணியினால் இன்றும் பலரது நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்துக்கொண்டுள்ளார்.

## முழுமையான சரணாகதி பாபா தரும் விளக்கம்

ஏன் உணர்ச்சி வசப்படுகிறாய்? உனது தேவைகளை என்னை கவனித்துக்கொள்ள விடு. அவைகளைப் பற்றி நான் தான் சிந்திக்கவேண்டும். உனது சரணாகதிக்காகவே நான் காத்துக் கொண்டு இருக்கிறேனே தவிர வேறு எதற்காகவும் அல்ல. நீ எப்படி என்னிடம் முழுமையாக சரணாகதி அடைவதென்பதைத் தெரிந்து கொண்ட பின்புதான் நான் அதில் தலையிடுவேன். அதன் பின்பு நீ எதைப் பற்றியும் இதற்குமேல் கவலை கொள்ளத் தேவையில்லை. எல்லாவித பயத்தில் இருந்தும், அதைரியப்படுத்தலில் இருந்தும் விடைபெறு. நீ என் மீது சந்தேகமற்ற நம்பிக்கை வைக்கவேண்டும்.

சரணாகதி என்றால், உனது பிரச்சினைகள் பற்றிய சிந்தனைகளை உன் மனதில் இருந்து அகற்றி விடுவதேயாகும். எல்லாவற்றையும் எனது கைகளில் ஒப்படைத்து விட்டு, இறைவா! ''எல்லாம் உன் செயல்'' என்று கூறு. இதை விளங்கக் கூறில், நீங்கள் எல்லாவற்றையும் உங்கள் கையில் எடுத்துக் கொண்டமைக்காகவும், எனது அதி உயர் நன்மைக்காக நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவிற்காகவும் இறைவா! நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தின் விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பது சரணாகதிக்கு முற்றிலும் முரண்பட்டது என்பதை நினைவில் கொள். அதாவது ஒரு குறிப்பிட்ட விஷயம் நீ எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்று சஞ்சலப்படுவதேயாகும். இதன் மூலம் நான் உன்னிடம் கொண்டுள்ள அன்பை நீ நம்பவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறாய். உனது வாழ்க்கை எனது கட்டுப்பாட்டில் இருப்பதையும், எந்த விஷயமும் என்னை மீறிச் செல்லாது என்பதையும் நீ ஏற்கவில்லை என்பதை நிரூபித்துவிட்டாய்.

இது எப்படி முடியப் போகிறது? இதற்கு என்ன நடக்கப் போகிறது? என்று சிந்திக்காதே! இப்படியான சிந்தனைத் தூண்டுதல்களுக்கு இடமளித்தால் நீ என்னை நம்பவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறாய். நான் இந்த விஷயத்தில் தலையிட வேண்டுமா? வேண்டாமா? அப்படியானால் இது சம்பந்தமாக எதுவித ஆவலும் கொள்ளாதே. நீ என்னிடம் பரிபூரண சரணாகதி அடைந்தால் மட்டுமே உன்னை என்னால் வழிநடத்த முடியும். அப்பொழுதுதான் நீ எதிர்பார்க்கும் பாதையை விட்டு வேறு பாதை ஒன்றின் மூலம் உன்னை இட்டுச் செல்ல முடியும். உன்னை எனது கைகளிலே தாங்கிச் செல்வேன்.

வைத்தியம் செய்யச் செல்லும் நோயாளி, வைத்தியரிடம் எனக்கு இவ்வாறுதான் வைத்தியம் செய்யப்பட வேண்டும் என்று கேட்கும் முறையை நீயும் பின்பற்றாதே. அப்படிச் செய்யாதே. ஒரு துக்கமான சந்தர்ப்பத்திலும் கூட, இந்தப் பிரச்சினைக்காக, இந்தத் தேவைக்காக இறைவனைப் புகழ்ந்து கூறி, நன்றி செலுத்து. தற்காலிகமாக இந்த பூமியில் வாழும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை உங்களுக்குப் பிடித்தமான விதத்தில் செய்து தருமாறு பிரார்த்தனை செய். எனக்கு எது மிக நல்லதென்று உங்களுக்குத்தான் தெரியும்.

சில சமயங்களில் விபரீதங்கள் குறைவதற்குப் பதிலாக அதிகரிப்பதை நீங்கள் உணரலாம். அதற்காக உணர்ச்சிவசப்படாதே. நம்பிக்கையுடன் கண்களை மூடிக்கொண்டு என்னிடம் சொல். அது உங்களால் தீர்க்கப்படட்டும். அதைப்பற்றி யோசிக்கும் போதும், கதைக்கும்போதும் தேவைப்பட்டால் நான் ஓர் அற்புதத்தைக் கூட செய்வதுண்டு. நீ என்னை பரிபூரணமாக நம்பும்போதுதான் நான் அதைப்பற்றி சிந்திப்பேன். எப்பொழுதும் நான் உன்னைப் பற்றி யோசித்தாலும் நீ என்னிடம் பரிபூரண நம்பிக்கை வைத்ததின் பின்பே நான் உனக்கு முழுமையாக உதவ முடியும்.



சாயி சிந்தனை

## உயர்தர மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம், மே.14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 2009 ஆம் ஆண்டுக்கும், 2011 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளார்கள்.

இத்திட்டத்தில் தகுதி உள்ள மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் பிரிவு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவுத் தலைவர், செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப மாதிரியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

Senior professor/ professor in Anatomy/Physiology/ Community Medicine/ Pathology / Forensic medicine/ Medicine/ pharmacology/ Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Surgery

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Anatomy/ Biochemistry/ Physiology/Community Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine/ Medicine/ Pharmacology/ Psychiatry/ obstertrics & Gynaecology/ paediatrics/ Surgery/ medical Education.

Endowment chair in Oncology/ Orthopedic Surgery

Clinical psychologist

Scientific Assistant in Biochemistry/ Forensic Medicine

### Para Medical Degree programme

Senior Lecturer Grade I / senior Lecturer Grade II /Lecturer (Probationary) in Nursing/ pharmacy/ Medical Laboratory Technology

Demonstrator (on contract) in Nursing / Medical Laboratory technology.

**Note:**

1. Applications for permanent post as well as contract appointment will be entertained.
2. Applications are expected from candidates with MBBS Degree for the posts in the faculty of Medicine.
3. Applications from cadidates with BDS degree shall be considered for the posts in Anatomy, physiology, Microbiology and Biochemistry.
4. Applications from candidates with BVSc degree can also be considered for the posts in Biochemistry.
5. Applications from condidates with BVSc degree could be considered for the posts in Anatomy, physiology and microbiology under category 4 of the scheme of recruitment.
6. Preference will be given to those who have MBBS degree with post graduate qualification in medical Administration/ Family Medicine for the posts in Communtity Medicine.
7. Applications from candidates with the following qualifications shall be considered for the post of clinical psychologist:
   (a) A Ph.D in Clinical psychology or equivalent postgraduate qualifications in that discipline.
   (b) First or Second class (Upper division) in honours degree in psychology, Sociology, Anthropology or philosophy with atleast one year experience in teaching/ research/ professional work/ postgraduate studies.
   Applicants under category (b) will be considered only if there are no suitable applicants under category (a). An applicant selected under category (b) would be required to undergo training in Clinical psychology and obtain postgraduate qualifications.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior professor | Rs, 57,755 - 11x900 - 67,655/- p.m |
| professor | Rs,50,905 - 13x850 - 61,955/- p.m |
| Senior Lecturer Gr. I | Rs,42,650 - 7x800 - 48,250/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs,37650 - 11x700 - 45,350/- p.m |
| Lecturer (probationary) | Rs30,000 10x585 - 32,750/- p.m |
| Clinical psychologist | Rs.20,900 - 10x585 -32,750/- p.m |
| Scientific Assistant | Rs.22,595 - 10x280 - 25,395/- p.m |
| Demonstrator | Rs,20,755 /- (fixed) p.m |

Note: In addition to the above salary, the following allowances will also be paid:
1. An academic allowance equivalent to 25% of the basic salary (for permanent academic posts)
ii. Cost of living allowance of Rs.4,500/- p.m

**Statutory benefits**

1. Sabbatical leave entitlement for the holder of the post of senior lecturer Gr. II and above
11. Membership in Universities Provident fund and pension scheme in the University system
111. Gratuity payments
1V. Employees trust Fund benefits
V. Free Medical Services.

**Closing date**

| | |
|---|---|
| Post of Senior Professor/ Professor - | 07.07.2009 |
| Other posts | 15.06.2009 |

Applications and other documents for the post of Senior Professor/Professor shall be sent to the Vice- Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments. Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri- Lanka either in person or by post, on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain Application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self- addressed stamped envelope 23x10 cm in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicant's from the university System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRILANKA
11.05.2009

(சி/558545)

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கிளைமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்
### (தற்காலிக அடிப்படையில்)

சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கின்ற சேவை மனப்பாங்குடன் முழு நேரமாக உழைக்கும் விருப்பார்வமுடைய 18 வயது தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* வேலை செய்யும் நாளொன்றுக்கு சகல படிகளும் உட்பட 250/= வழங்கப்படும்.
* வேலைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் ரொக்க, ஆதனப் பிணையை சங்கத்தில் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும். ரொக்க பிணைக்கு சங்கத்தால் வட்டி வழங்கப்படும்.
* தகைமை: கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி 25.05.2009ஆம் திகதிக்கு முன்னதாக **"பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி"** என்னும் முகவரிக்கு "தற்காலிக கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் அனுப்பப்படும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து) **பொதுமுகாமையாளர்.**
சாவகச்சேரி.

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## இலிகிதர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்
### (தற்காலிக அடிப்படையில்)

சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கின்ற சேவை மனப்பாங்குடன் வேலை செய்ய விருப்பார்வமுடைய 18 வயது தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு சகல படிகளும் உட்பட 200/= வழங்கப்படும்.
* கணனியில் வேலை செய்யும் அனுபவமுள்ளவர்களுக்கும் தட்டச்சு தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
* வேலைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணையை சங்கத்தில் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும். பிணைப்பணத்திற்குரிய வட்டி சங்கத்தால் வழங்கப்படும்.
* தகைமை: கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம், சிங்களம் / தமிழ்பாஷை உட்பட ஐந்து திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 25.05.2009ஆம் திகதிக்கு முன்னதாக **"பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி"** என்னும் முகவரிக்கு "தற்காலிக இலிகிதர் பதவிக்கான விண்ணப்பம்" என கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் அனுப்பப்படும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து) **பொதுமுகாமையாளர்.**
சாவகச்சேரி.

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பதவி:- **வாகனசாரதி**

1. சம்பள குறியீட்டு இலக்கம்:- 312/14 (சுற்று நிருப இல.165/88இன்படி)
2. சம்பள அளவுத்திட்டம்:- ரூபா 9700-80X10-85X10 ரூபா 11350 (சுற்று நிருப இல. 66/2006)
3. தகைமைகள்:
   5ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ்/லொறி/டிராக்டர் (பெட்டியுடன்) செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி:- **வாகனச் சுத்திகரிப்பாளர்**

1. சம்பள குறியீட்டு இலக்கம்:- 314/16 (சுற்றுநிருப இல.165/88)
2. சம்பள அளவுத்திட்டம்:- ரூபா 9200-70X10-75X10 ரூபா 10650 (சுற்றுநிருப இல.66/2006)
3. தகைமைகள்:-
   அ)கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்
   அல்லது
   ஆ)ஐந்தாம் (05) வகுப்பில் சித்தி பெற்றிருப்பதுடன் சிறந்த திடகாத்திரமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

பதவி:- **காரியாலய சேவகர்**

1. சம்பள குறியீட்டு இலக்கம்:- 317/17 (சுற்றுநிருப இல.165/88)
2. சம்பள அளவுத்திட்டம்:- ரூபா 8950-65X10-70X10 ரூபா 10300 (சுற்றுநிருப இல.66/2006)
3. தகைமைகள்:-
   அ)எட்டாம் வகுப்பு (08) கல்வித்தராதரப் பத்திரம்

**பொது**

1. மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை **"பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி"** என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4. வயது:- 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
5. **விண்ணப்ப முடிவு திகதி - 25.05.2009**
6. இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து சங்கத்தால் குறிப்பிடப்படும் ரொக்க, ஆதனப்பிணையை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து) **பொதுமுகாமையாளர்.**
சாவகச்சேரி.

(சி/558550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, மியன்மாருடனான கடல் எல்லைப் பிரச்சினைக்கு ஐ.நா.சபை மூலம் தீர்வுகாண பங்களாதேஷ் முயற்சி

டாக்கா, மே 14

கடல் எல்லை விவகாரம் தொடர்பாக இந்தியாவுடனும், மியான்மருடனும் உள்ள பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் தீர்வு காண பங்களாதேஷ் முடிவு செய்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஹைட்ரோ கார்பன் அகழ்ந்தெடுக்க பங்களாதேஷ் திட்டமிட்டிருந்தது. ஆனால், கடல் எல்லையைக் காரணம் காட்டி இதற்கு இந்தியாவும், மியான்மரும் முட்டுக்கட்டை போட்டுள்ளன.

இதையடுத்து, கடல் எல்லையை வரையறுக்கவும், பிரச்சினைக்குத் தீர்வு காணவும் ஐ.நாவின் உதவியை நாட பங்களாதேஷ் தீர்மானித்துள்ளது.

கடல் எல்லை தொடர்பாக மியான்மரின் கோரிக்கைக்கு எதிர்வரும் ஜூனில் ஆட்சேபம் தெரிவிக்கவும், நவம்பரில் இந்தியாவின் கோரிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கவும் பங்களாதேஷ் முடிவு செய்துள்ளது.

''பங்களாதேஷ் விரிகுடாவில் எங்கள் நாட்டை ஒட்டியுள்ள பகுதியிலுள்ள கடல் வளத்தை பயன்படுத்திக்கொள்ளும் உரிமை எங்களுக்கே உண்டு. இதை நாங்கள் கேட்டுப் பெறுவோம்'' என அண்மையில் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் திபு மோனி கூறியிருந்தார்.

கடல் எல்லையில் தனக்குள்ள உரிமை குறித்து மியான்மர் ஐ.நா. ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. ஆனால், இந்தியா இன்னும் தனது அறிக்கையை அனுப்பவில்லை. அது விரைவில் அனுப்பி வைக்கக்கூடும் எனத் தெரிகிறது.

ஐ.நா. மாநாட்டுத் தீர்மானப்படி பங்களாதேஷ் தனது கடல் எல்லையை 2011 ஆம் ஆண்டு ஜூலைக்குள்ளும், இந்தியா 2009 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதிக்குள்ளும், மியான்மர் 2009 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதிக்குள்ளும் முடிவு செய்து அறிவிக்கவேண்டும். கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே மியான்மர் தனது அறிக்கையை ஐ.நாவிடம் தாக்கல் செய்துவிட்டது.

# ரஷ்யா செல்கிறார் ஒபாமா

மாஸ்கோ,மே 14

ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவின் அழைப்புக்கிணங்க, எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மூன்று நாள்கள் ரஷ்ய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். ஒபாமா 8 ஆம் திகதி வரை ரஷ்ய சுற்றுப் பயணத்தை மேற்கொள்வார்.

லண்டனில் ஏப்ரல் 1 ஆம் திகதி ஆரம்பமான ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் தனிப்பட்ட முறையில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் ரஷ்யாவுக்கு வருகை தருமாறு, ரஷ்ய ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஒபாமா ஏற்றுக்கொண்டார். இதற்கிணங்கவே, ஒபாமாவின் ரஷ்யப் பயணம் ஏப்ரல் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கடந்த வாரம் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டார். இவர் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில் ஒபாமாவின் ரஷ்ய விஜயமும் உறுதி செய்யப்பட்டது.

# தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு இராணுவத்திற்கு துணையாக கொமாண்டோக்கள்

இஸ்லாமாபாத், மே 14

பாகிஸ்தானின் வட-மேற்குப் பகுதியில் தலிபான் தீவிரவாதிகளுடன் போரிட்டுவரும் இராணுவத்தினருக்குத் துணையாக கொமாண்டோ படையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொமோண்டோ படைச் சிப்பாய்கள் செவ்வாய்க்கிழமை, ஹெலிக்கொப்டெர்கள் மூலமாக வட-மேற்குப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். ஹெலிக்கொப்டெர்கள் மூலமாக, சிப்பாய்களைக் குவிப்பது இதுதான் முதல் தடவையாகும்.

வட-மேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள ஸ்வாட் பகுதியில் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் வரை தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி வருகிறார்கள். தலிபான்களோடு ஆப்கான் உட்பட மற்றும் பல நாடுகளின் தீவிரவாதிகளும் இணைந்துள்ளார்கள்.

இந்த இராணுவச் சிப்பாய்களுக்கு உதவியாக ஸ்வாட் பகுதியிலுள்ள பியோச்சர் என்னுமிடத்தில், ஹெலிக்கொப்டெர்கள் மூலமாகக் கொமாண்டோ வீரர்கள் குவிக்கப்பட்டார்கள். இப்பகுதியே தலிபான்களின் கேந்திரக் கோட்டை யென தெரிவிக்கப்படுகிறது.

ஸ்வாட் பகுதியில் பிரதான நகரான மிங்கோராவில் தரைமார்க்கமாக இராணுவம் முன்னேற முடியாதவாறு தலிபான்கள் தடுப்பு அரண்களை அமைத்துள்ளார்கள். இதனால்தான் ஹெலிக்கொப்டெர்கள் மூலமாக படையினர் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

தலிபான்களுக்கு எதிராக நடைபெற்று வரும் உக்கிரச் சண்டையில், கடந்த சில தினங்களில் மட்டும் 700 இற்கு மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

# மலேஷியத் தமிழர் 'இந்தராய்' மீதான தடையை ரத்துச் செய்வது குறித்து ஆலோசனை

கோலாலம்பூர், மே 14

மலேஷியாவிலுள்ள தமிழர்களின் ''இந்தராய்'' என்ற அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை இரத்துச் செய்வது குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என மலேஷிய உள்துறை அமைச்சர் றிஷாமுதீன் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

மலேஷியாவின் மொத்த மக்கள் தொகை 2 கோடியே 80 இலட்சம் ஆகும். இதில் 7.4 சதவீதமானோர் தமிழ் இந்துக்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20 இலட்சமாகும். இவர்கள் தங்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன எனக் கூறி, இவற்றை மீட்டெடுப்பதற்காக இந்த்ராப் என்ற அமைப்பை நிறுவினர்.

இந்த அமைப்பு தமிழர்களின் உரிமைகளுக்காக போராட்டத்தில் ஈடுபட்டது. இப்போராட்டத்தை அப்போதைய பிரதமர் படாவி கடுமையாக ஒடுக்கினார். இந்த்ராப் அமைப்புக்குத் தடை விதித்தார். அந்த அமைப்பின் தலைவர்களான உதயகுமார், மனோகரன், கணபதி ராவ், கே.வசந்தகுமார் ஆகியோர் உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டனர். இவர்கள் 17 மாத காலம் சிறையிலிருந்தனர்.

படாவி பதவி விலகியதும், நஜீப்துன் ரசாக் புதிய பிரதமராக பதவியேற்றார். இவர் சிறையிலிருந்த இத்தலைவர்களை விடுதலை செய்தார்.

இந்நிலையில், 20 கோடி ரூபாய் இழப்பீடு கோரி, மனோகரன் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார். தவறு செய்யாத தங்களைக் கைது செய்து, 17 மாத காலம் சிறையில் அடைத்து வைத்திருந்தமைக்காக, இந்த இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என இவர் தம் மனுவில் கோரியுள்ளார்.

இந்த்ராப் அமைப்பின் தலைவர்கள் கைது செய்யப்பட்ட சமயம் அதன் முக்கிய தலைவர் வேதமூர்த்தி பிரிட்டனிலிருந்தார். கைது பற்றிய தகவல் வெளியானதும் அவர் அடைக்கலம் கோரி அங்கேயே தங்கிவிட்டார். தலைவர்கள் விடுதலையானதும் தாம் நாடு திரும்புவார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இவரது நிலை குறித்து நிருபர்கள் உள்நாட்டு அமைச்சரிடம் வினவினர். ''வேதமூர்த்தி நாடு திரும்பினால் கைது செய்யப்படுவாரா?'' என ஒரு நிருபர் கேட்டார். இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், ''இது குறித்து நீங்கள் பொலிஸாரிடந்தான் கேட்கவேண்டும். எல்லாவற்றுக்கும் என்னிடமிருந்து பதிலை எதிர்பார்க்க முடியாது'' என்றார்.

உலக அரங்கில்

# 'ஹப்பிள்' தொலைநோக்கியில் கோளாறு சரிசெய்ய விண்வெளி வீரர்கள் பயணம்

கேப் கனவெரல், மே 14

பூமியை படம் பிடிக்கும் பணிக்காக அமெரிக்கா விண்ணுக்கு அனுப்பிய 'ஹப்பிள்' தொலைநோக்கியில் ஏற்பட்ட கோளாறுகளை சரிசெய்ய, அட்லாண்டிஸ் விண்கலத்தில் 7 விண்வெளி வீரர்கள் செவ்வாய்க்கிழமை புறப்பட்டனர்.

புளோரிடா விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் பாய்ந்த அட்லாண்டிஸ் விண்கலம், மொத்தம் 11 நாள்கள் விண்வெளியில் தங்கியிருந்து, ஹப்பிள் தொலைநோக்கியை சீரமைக்கும் பணியில் ஈடுபடும் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்ட ஹப்பிள் தொலைநோக்கி இதுவரை 4 முறை சீரமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்தாண்டு ஒக்டோபரில் 5 ஆவது முறையாக சீரமைப்புப் பணியை மேற்கொள்ள நாசா திட்டமிட்டிருந்தது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்ட சீரமைப்புப் பணி, தற்போது 7 மாதங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹப்பிள் தொலைநோக்கியை சீரமைக்கும் பணிக்காக விண்வெளியில் 5 முறை நடக்க வீரர்கள் முடிவு செய்துள்ளனர்.

# மோதல் நடைபெறும் பகுதியிலிருந்து வெளியேறும் பாகிஸ்தான் மக்களுக்கு உதவ அமெ. நிதியுதவி

இஸ்லாமாபாத், மே 14

பாகிஸ்தான் வட-மேற்கு எல்லைப்புற மாநிலத்தில் இராணுவத்துக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்று வரும் கடும் சண்டையால் அம் மாநிலத்திலிருந்து வெளியேறியுள்ள மக்களுக்கு அவசர கால நிதியுதவி வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இம்மக்களின் அவசரகால நிதியுதவியாக,750 கோடி ரூபா வழங்கப்படும். தற்காலிக கூடாரங்கள், போர்வைகள், படுக்கைகள், சமையற்பாத்திரங்கள், இன்னபிற அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக இந்நிதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேவேளை, உள்நாட்டிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளோருக்கு உதவும் பொருட்டு, நிதியுதவி பெறுவதற்காக, சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை தாம் நடத்தவுள்ளார் என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானி தெரிவித்துள்ளார்.

வட-மேற்கு எல்லைப்புற மாநிலத்தில் இடம்பெற்றுவரும் சண்டையால் [illegible] சத்துக்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர் அம் மாநிலத்தை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்கள் பல முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அதேவேளை, தொடர்ந்தும் மக்கள் வெளியேறி வருகிறார்கள்.



ஸ்வாட் பள்ளத்தாக்கிலிருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் ஸ்வாபி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிக முகாமில் தஞ்சமடைந்துள்ளார்கள். இடம்பெயர்ந்த சிறுவனொருவன், தன் குடும்பத்தின் கூடாரத்துக்கு வெளியே நின்றுகொண்டிருக்கின்றான்.

# பாக். வசீரிஸ்தான் பகுதியில் அமெ. விமானம் தாக்குதல்

## 8 தீவிரவாதிகள் பலி

இஸ்லாமாபாத்,மே 14

பாகிஸ்தானின் தென் வசீரிஸ்தான் பகுதியில், ஆளில்லா அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டெரொன்று, தலிபான் தீவிரவாதிகளின் முகாமொன்றின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் எட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள்.

வசீரிஸ்தான் பிராந்தியத்தில் தஞ்சம் புகுந்துள்ள அல்-குவைதா தீவிரவாதிகளும், ஆப்கானிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளும் அடிக்கடி எல்லை கடந்து, ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து தாக்குதல்கள் நடத்திவிட்டு, பாகிஸ்தானுக்குள் புகுந்து விடுகிறார்கள். இவர்களை ஒடுக்குவதில் அமெரிக்க இராணுவம் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருகிறது.

பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ள தீவிரவாதிகளை ஒடுக்குமாறு அமெரிக்கா பல தடவைகள் பாகிஸ்தானை வலியுறுத்தியுள்ளது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட பலன் கிட்டவில்லை. அதனால் அமெரிக்கா தீவிரவாதிகள் மீது நேரடித் தாக்குதலை ஆரம்பித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கூட்டுப் படைகளே அடிக்கடி இத்தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றன. அதனால், கடந்த ஆண்டு முதல் இதுவரை அமெரிக்காவின் ஆளில்லா போர் விமானங்கள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி 40 தடவைகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத்தாக்குதல்களில் 320 பேர் பலியாகியுள்ளனர். அநேகர் காயமடைந்துள்ளனர். பலியானோரில் அப்பாவிப் பொதுமக்களும் அடங்குவர் என்ற முறையீடுகளும் எழுந்துள்ளன. இவ்வாண்டு இதுவரை 16 தடவைகள் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை இலை சின்னத்தை அழுத்தினால் உதயசூரியனில் வாக்குப் பதிவாகின்றதாம்!



## இயந்திரத்தில் முறைகேடு என்கிறார் ஜெயலலிதா

சென்னை, மே 14

தமிழகத்தில் ஆங்காங்கே வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடைபெறுகிறது. வாக்காளர்கள் இரட்டை இலைச் சின்னத்தை அழுத்தினால் உதயசூரியன் சின்னத்தில் வாக்குப் பதிவாகிறது என்று சில இடங்களில் முறைப்பாடு கூறியுள்ளனர் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்றுக்காலை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் வாக்களிக்க வந்தபோதே அவர் இதைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தேர்தலுக்குப் பின்னர் தங்களை ஆதரிக்குமாறு பல கட்சிகளிலிருந்து அழைப்பு வந்துள்ளது. எனினும், தேர்தலுக்குப் பின்னர் இதுகுறித்து கூட்டணிக் கட்சிகளிடம் ஆலோசித்த பின்னரே முடிவு எடுக்கப்படும்.

தமிழகத்தில் ஆங்காங்கே வாக்குப் பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடைபெறுகிறது. வாக்காளர்கள் இரட்டை இலைச் சின்னத்தை அழுத்தினால் உதய சூரியன் சின்னத்தில் வாக்குப் பதிவாகிறது என்று சில இடங்களில் முறைப்பாடு கூறியுள்ளனர்.

தென் சென்னையில் 150க்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் வேலை செய்யவில்லை. திருவல்லிக்கேணியில் காலை 7 மணியளவில் சில தி.மு.கவினர் வாக்களித்துக் கொண்டிருந்தனர். அதே நபர்கள் திரும்பத் திரும்ப வாக்குச்சாவடிக்குள் சென்று வருவதை பார்த்த பொதுமக்கள் அவர்களை விரட்டியடித்துள்ளனர்.

சில வாக்குச்சாவடிகளில் பாதுகாப்புக்கு துணை இராணுவப் படையினர் நிறுத்தப்படவில்லை - என்றார்.

## நடிகர்கள் ஆர்யா, விஷால் ஏற்படுத்திய குழப்பம்......



சென்னை, மே 14

நடிகர்கள் ஆர்யா, விஷால் ஆகிய இருவரும் வாக்குச்சாவடியில் வரிசையில் நிற்காமல் உடனடியாக வாக்களித்துச் சென்றதால் வரிசையில் நின்ற வாக்காளர்கள் கோபமடைந்தனர். இதனால், அங்கு குழப்பம் ஏற்பட்டது.

அண்ணா நகரில் உள்ள வள்ளியப்பா மேல்நிலைப் பாடசாலை வாக்குச்சாவடியில் நேற்றுக்காலை நடிகர்கள் ஆர்யா, விஷால் ஆகியோர் வாக்களிக்க வந்தனர்.

ஆனால், அவர்கள் வரிசையில் நிற்காமல் உடனடியாக வாக்குச்சாவடிக்குள் சென்று வாக்களித்தனர். இதற்கு அதிகாரிகள் அனுமதி அளித்ததற்கு வாக்காளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டது.

# ஈழப் படுகொலை சி.டி. ஒளிபரப்பை தடுக்கவே பல இடங்களில் மின்தடை

## ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, மே 14

இலங்கைப் பிரச்சினை தொடர்பான வீடியோ சி.டியை ஒளிபரப்பும்போது அதைப் பெரும்பாலான மக்கள் பார்க்காமல் தடுக்கவே சென்னையிலும் வேறு பல இடங்களிலும் செயற்கையாக மின்தடை செய்யப்பட்டது - என்று பா.ம.க. தலைவர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு -

இலங்கைப் பிரச்சினையை விளக்கும் சி.டியை மக்கள் தொலைக்காட்சி ஒளிபரப்பலாம் என உயர் நீதின்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்துதான் அந்த சி.டி. நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு மக்கள் தொலைக்காட்சி செய்தி நேரத்தின்போது ஒளிபரப்பப்பட்டது. அந்த வீடியோ காட்சிகளை மக்கள் பார்த்துவிடக் கூடாது என்பதற் காக மாநிலத்தின் பல பகுதிகளில் மின்தடை செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைகளும், செய்தி ஊடகங்களின் உரிமைகளும் ஆட்சியாளர்களால் எந்த அளவுக்குத் தமிழகத்தில் மறுக்கப்படுகின்றன என்பதற்கு இந்தச் செயற்கை மின்தடை சிறந்த எடுத்துக்காட்டு. இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையைக் கண்டிக்க அனைவரும் முன்வர வேண்டும் - என்றார்.



நேற்றுக்காலை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் நடிகர் ரஜினிகாந்த் தனது மனைவி லதா, மகள் சௌந்தர்யாவுடன் வாக்களிக்க வந்தபோதே.........

# வாக்காளர் பட்டியலில் பெயர்நீக்கம்: ஆழ்ந்த வருத்தத்தில் கமலஹாசன்!

சென்னை, மே 14

நடிகர் கமலஹாசனின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள் ளது. இதனால் அவர் கடும் அதிர்ச்சியடைந்துள்ளதுடன், ஆழ்ந்த வருத்தத்திலுள்ளார்.

ஹைதராபாத்தில் படப்பிடிப்பில் இருந்த நடிகர் கமலஹாசன் வாக்களிப்பதற்காக நேற்றுமுன்தினம் மாலை அவசரமாகச் சென்னை புறப்பட்டு வந்தார். இந்தநிலையில் அவர் தனது பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதை அறிந்து வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பவை வருமாறு -

நான் வாக்களிப்பது தடைப்படுவது இதுவே முதல்முறை ஆகும். இதற்காக எனது படப்பிடிப்பை ரத்துச் செய்துவிட்டு புறப்பட்டு வந்தேன். இதனால் எனக்கு 10 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.



ஒவ்வொரு சாதாரண குடிமகனும் வாக்களிக்க வேண்டும் என்பது ஜனநாயகக் கடமை. ஆனால், எனது வாக்குரிமை பாதிக்கப்பட்டுள்ளமை வருத்தம் அளிக்கிறது.

இதுகுறித்து அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளேன். நான் சென்னை முகவரியில் தான் வருமான வரி செலுத்தி வருகிறேன். மின் கட்டணமும் இதே முகவரியில்தான் செலுத்துகிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் லஸ் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பாடசாலை யில் தான் வாக்களித்தேன் - என்றார்

## இந்தியச் செய்திகள்

# அத்வானியைப் பிரதமராக ஏற்கும் எக்கட்சியுடனும் கூட்டணி - நாயுடு

ஹைதராபாத், மே 14

அத்வானியைப் பிரதமராக ஏற்கும் எந்த ஒரு கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ள பாரதிய ஜனதாக் கட்சி தயாராகவுள்ளது - என்று அக்கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

ஹைதராபாதில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோது அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தனித் தெலங்கானவை உருவாக்குவதாக உறுதியளித்தால் பாரதிய ஜனதாக் கட்சியின் மத்தியில் ஆட்சியமைக்க தெலங்கானா ராஷ்ட்ரீய சமிதி ஆதரவு தெரி விக்கும் என அக்கட்சித் தலைவர்கள் அண்மையில் தெரிவித்தனர்.

இதன் மூலம் பா.ஜ.கவுக்கு தெலங்கானா ராஷ்ட்ரீய சமிதி ஆதரவளிப்பது உறுதியாகிவிட்டது என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இதுபோன்ற நிலையில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேச கட்சியின் ஆதரவைப் பெறவே வெங்கையா நாயுடு ஹைதராபாத்துக்கு வந்துள்ளார் என்று ஆந்திர அரசியல் வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது.

இதுகுறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு மறுப்புத் தெரிவித்த வெங்கையா நாயுடு, தேர்தல் முடிவு வெளியாகும் வரை எந்தக் கட்சியுடனும் பா.ஜ.க., கூட்டணி குறித்து பேசாது.

அத்வானியை பிரதமராக ஏற்கும் எந்த ஒரு கட்சியையும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து செயலாற்ற வரவேற்போம். இதுதான் எங்களின் பொதுவான நிலைப்பாடு. எங்களின் இந்த நிலைப்பாட்டை ஏற்று ஏராளமான கட்சிகள் எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன.

ஆனால் தேர்தல் முடியும் வரை எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள கட்சிகளின் பெயரையோ, கட்சித் தலைவர்களின் பெயரையோ சொல்லமாட்டேன்.

பிற கட்சிகளின் ஆதரவைத் தேட பா.ஜ.க. முயற்சிக்கிறது என தற்போது ஊடகங்களில் வெளியாகும் தகவல் வெறும் வதந்தி. இந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கூட்டணியாக உருவெடுக்கும் - என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# ஈழப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு உயர்மட்டக் குழுவை நியமிக்க வேண்டும்

## உயர்நீதிமன்றில் வழக்கு

சென்னை, மே. 14

இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்க்கவும், அங்கு அமைதியை கொண்டு வரவும் மத்திய அரசு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றில் வை.பாலசுந்தரம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அகில இந்திய அம்பேத்கார் மக்கள் இயக்கத் தலைவர் வை.பாலசுந்தரம் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடையாது. அங்குள்ள அப்பாவி மக்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள்.

அரசியல் லாபத்துக்காக அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி வருகிறார்கள். அரசியல்வாதிகள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

மத்திய, மாநில அரசுகளின் உதவியோடு இலங்கைத் தமிழர்களுக்கு, இலங்கை அரசு சமஉரிமை வழங்க மறுத்து வருகிறது. இந்தியாவிற்கு வரும் அகதிகளுக்காக கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையால் இங்கு சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் இந்திய மக்கள் சட்டவிரோதமாக தடுப்பு காவல் சட்டத்தில் வைக்கப்படுகிறார்கள். இலங்கைக்கு உதவி செய்ததற்காக இலங்கைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அதை ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை அரசுக்கு, மத்திய - மாநில அரசுகள் உதவி செய்வதைத் தடுக்க வேண்டும். இந்திய அரசியல் சட்டம் 51ஆவது பிரிவானது சர்வதேச அளவில் அமைதியை வளர்க்க வேண்டும் என்றும், பாதுகாப்பை வளர்க்க வேண்டும் என்றும் கூறுகிறது.

சர்வதேச அளவில் நடைபெறும் தகராறுகளை பேச்சின்மூலம் தீர்த்து வைக்க வேண்டும் என்[...] மத்திய அரசு இ[...]யில் அரசியல் சட்டம் 51ஆவது பிரிவுக்கு எதிராக நடந்து வருகிறது. இந்தப் பிரச்சினையை அமைதிக்கு கொண்டுவருவது மத்திய அரசின் கடமை யாகும். ஆகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்க்கவும், அங்கு அமைதியை நிலைநாட்டவும் உயர்மட்டக் குழுவை நியமிக்கப்படி மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

மத்திய அரசு, இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்குவதற்கும் தடை விதிக்க வேண்டும் - என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவை நீதிபதிகள் பி.ஜோதிமணி, டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் விசாரித்தனர்.

இந்த மனு மீதான விசாரணையை வரும் 26ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

மத்திய அரசு, தமிழக அரசு, தேர்தல் [...]ஆகியவற்றுக்கு நோட்டீஸ் [...]வும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் வாக்களிப்பு மாலையிலேயே விறுவிறுப்பு; பலருக்கு அனுமதி இல்லை; பரவலாக வன்முறைகள்!

சென்னை, மே 14
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 மக்களவைத் தொகுதிகளிலும் நேற்று



மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி மற்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா.

நடந்த தேர்தலில் பல இடங்களில் வாக்குப்பதிவு மந்தமாக இருந்தது எனவும் சில இடங்களில் விறுவிறுப்பாக இருந்தது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திண்டுக்கல், தேனி, சென்னை உட்பட பல பகுதிகளில் கொலை, கத்திக் குத்து மற்றும் தாக்குதல் சம்பவங்கள் சில இடம்பெற்றுள்ளன. இதனால் அப்பகுதிகளில் பதற்றமான நிலை காணப்பட்டது எனக் கூறப்படுகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் இயந்திரங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வாக்குப்பதிவில் தாமதம் ஏற்பட்டது என வும் வாக்காளர்கள் அடையாள அட்டைகள் வைத்திருந்தும், பட்டியலில் பலரின் பெயர் இல்லாமையால் ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பிச் சென்றனர் எனவும் கூறப்படுகிறது.

இந்திய மக்களவைக்கு ஐந்து கட்டங்களாகத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஏற்கனவே நான்கு கட்டத் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. ஐந்தாவது கட்டத் தேர்தல் நேற்று தமிழகம், புதுச்சேரி உட்பட 86 தொகுதிகளில் நடைபெற்றது.

**தென் மாவட்டங்களில் வாக்குப்பதிவு மந்தம்**

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு ஆரம்பமானது. சென்னையிலும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மிகவும் மந்தமான வாக்குப்பதிவு காலையில் காணப்பட்டது. சென்னை நகரில் திருவான்மியூர், அடையாறு, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு இருந்த போதிலும் பல பகுதிகளில் மிகவும் மந்தமாகவே வாக்குப்பதிவு இருந்தது என செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் மாவட்டங்களிலேயே மிக மந்தமாக வாக்குப்பதிவு நடைபெற்றது எனக் கூறப்படுகிறது. காலை 11 மணி வரை பல மாவட்டங்களில் 7 முதல் 10 சதவீத வாக்குகளே பதிவாகியிருந்தன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை போன்ற வடமாவட்டங்களில் ஓரளவுக்கு விறுவிறுப்பான வாக்குப்பதிவு இருந்தது. மக்கள் காலை முதலே நீண்ட வரிசைகளில் நின்று வாக்களித்தனர்.

**வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு**

மாநிலத்தின் பல பகுதிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டு வாக்குப்பதிவுகளை ஆரம்பிப்பது தாமதமானது. பல பகுதிகளிலும் இடையில் இயந்திரங்கள் கோளாறானதால் வாக்குப்பதிவு தடைப்பட்டது. கிராமங்களில் அடையாள அட்டைகளைக் கொண்டு வராமல் ரேஷன் கார்ட்டுகளை எடுத்து வந்த ஏராளமான பெண்கள் உள்ளிட்ட வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேலும் பல பகுதிகளில் வாக்காளர் அடையாள அட்டைகள் இருந்தும் பட்டியலில் பெயர்கள் இல்லாதமையால் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. இதனால் மக்கள் ஏமாற்றமடைந்து திரும்ப நேர்ந்தது.

மேலும் திண்டுக்கல்லில் தி.மு.க. பிரமுகர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவமும், தேனியில் அ.தி.மு.க பிரமுகருக்கு அரிவாள் வெட்டு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களும், இதேவேளை சென்னையில் மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அரிவாள் வெட்டுச் சம்பவமும் அப்பகுதிகளில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. இதனால் மக்கள் வாக்களிக்க அச்சமடைந்த நிலையில் காணப்பட்டனர்.

இத்தகைய காரணங்களாலும், கடும் வெயில் காரணமாகவும் பிற்பகல் வரை மந்தமாக இருந்த வாக்குப்பதிவு மாலையில் விறுவிறுப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# ஐரோப்பிய ஒன்றியம் ரணிலை அழைத்தமை அரசை ஆத்திரமடையச் செய்துள்ளது

## ஐ.தே.கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே 14

ஐரோப்பிய ஒன்றியம், இந்த நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்காமல் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்ததால் அரசு கடும் ஆத்திரமடைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அதனால்தான், ரணில் இந்த நாட்டுக்கு எதிராக செயற்படுவதற்காகவே ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார் என்று அரச ஊடகங்கள் சேறு பூசுகின்றன என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. அகிலவிராஜ் காரியவசமே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த விசேட அழைப்பின் பேரிலேயே ரணில் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்காமல் எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்ததால் அரசு எம்மீது கோபமடைந்துள்ளது.

**ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்காமைக்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது**

இந்தக் கோபத்தை வெளிக்காட்டும் பொருட்டு அரசு எமது தலைவரின் விஜயத்தை மிக மோசமாக விமர்சிக்கின்றது. அவர் இந்த நாட்டுக்கு எதிராகச் சதி செய்வதற்காகவே சென்றுள்ளார் என்று கூறுகின்றது.

ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்காமைக்கு எம்மால் எதுவும் செய்ய முடியாது. எமது தலைவரின் ஆற்றல் மற்றும் சர்வதேச நாடுகளுடனான அவரின் உறவின் காரணமாகவே அவர் அழைக்கப்பட்டார்.

எமது ஆட்சிக்காலத்தின் போது எமது தலைவர் சர்வதேச நாடுகளுடன் நல்லுறவைப் பேணினார். இந்த அரசைப் போல் நாம் சர்வதேசத்துடன் மோதிக்கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு அழைப்பு விடுத்திருப்பதன் மூலம் இந்த நாட்டை ஆட்சி செய்யக்கூடிய வல்லமை படைத்தவர் எமது தலைவர்தான் என்பது தெரியவருகின்றது - என்றார்.

# வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ளோரை தீவுப்பகுதியில் குடியமர்த்தும் சாத்தியம் ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே 14

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை தீவுப்பகுதியில் குடியமர்த்துவதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயப்படுவதாக அறியவருகின்றது.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலன்களை கவனிப்பதற்கும் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்குமாக கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்கள் கொண்ட அமைப்பு இதற்கான முன் முயற்சிகளை எடுத்துள்ளது.

தீவுப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான வீடுகள் பாவிப்பாளர் இன்றி இருப்பதாகவும் அந்த வீடுகளை திருத்தியமைத்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரை குடியமர்த்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர்களை தீவுப்பகுதியில் குடியமர்த்தலாம் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரமுகர்கள் அரச உயர்மட்டத்துடன் பேச்சுக்களை நடத்திவருவதாக அறியவருகின்றது. (அ-1)

# இலங்கையில் நிகழும் அவலத்தை பாதுகாப்புச் சபையில் ஆராய்க!

## ஐ.நா.சபையின் மனித உரிமைக் காப்பகம் வலியுறுத்து

லண்டன், மே 14

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மனிதாபிமான அவலம் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபை உடனடியாக ஆராய வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலும் மருத்துவமனைக்கு அருகிலும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாமென இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகள் அரசை கேட்க வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு சபையின் உத்தியோகபூர்வ வைபவத்திலும் மனித உரிமை கவுன்சிலின் விசேட அமர்விலும் இலங்கை குறித்து ஆராய வேண்டுமென்றும் மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மீது ஈவிரக்கமற்ற ஷெல்வீச்சு இடம் பெறுவதை சமீபத்திய செய்மதிப் படங்கள் மூலமும் நேரடியாகக் கண்டவர்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இலங்கை இராணுவமும் விடுதலைப்புலிகளும் பொது மக்களை பீரங்கி குண்டுகளுக்கு இரையாக்குவது குறித்து எவ்வித தயக்கத்தையும் வெளிப்படுத்தவில்லை என்றும் மனித உரிமை கண்கானிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது. (அ-சி)

# வெற்றி நடை போடுகிறது டெல்லி

## 161 ஓட்டங்களுக்குள் சுருண்டது டெக்கான்

டர்பன், மே 14

ஐ.பி.எல் ருவன்ரி - 20 போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி டேர் டெவில்ஸ் 12 ஓட்டங்களால் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது

தென்னாபிரிக்காவின் டர்பனில் நேற்று நடைபெற்ற 43ஆவது போட்டி யில்சேவாக் தலைமையிலான டெல்லி டேர் டெவில்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர் டெவில்ஸ்20 ஓவர்கள் நிறைவில் 7விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தினேஸ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் (4பௌண்டறிகள் 3 சிக்ஸர்கள்) வில்லியர்ஸ் (44), டில்சான் 17 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

சேவாக் (11), வோர்ணர் (04),வஹ்ரிஜா (0), மிஸ்ரா (2) என துடுப்பில் பிரகாசிக்காது தம்முடைய விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். பந்து வீச்சில் வாஸ், ஓஜ்ஹா தலா2 விக்கெட்டுகளையும் ஸ்மித், சைமன்ஸ் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பில் அணித் தலைவர் கில்கிறிஸ்டும், அன்ரூ சைமன்ஸும் மாத்திரம் பிரகாசிக்க ஏனையோர் பெரிதாக சோபிக்காததால் 19.4 ஓவர்களில் 161 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

கில்கிறிஸ்ட் 33 பந்துகளில் 5 பௌண்டறிகள் 5சிக்ஸர்கள் அடங்கலாக 64 ஓட்டங்களையும் சைமன்ஸ் (3 பவுண்டறிகள், 2சிக்ஸர்கள்) 41 ஓட்டங்களையும் ரவிரெஜா (27), சுமன் (3), ஸ்மித் (12), ஆர்.சர்மா (6) ஆர்.பி.சிங் (0) ஓஜ்ஹா (0), என ஆட்டமிழக்கவாஸ் (10) ஆட்டமிழக்காமல் பெற்றார்.

பந்து வீச்சில் வஹ்ரியா 4 சங்வான் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக வஹ்ரியா தெரிவானார். (06)

**ஐ.பி.எல். ருவென்ரி-20 இன்றைய ஆட்டங்கள்**

அணிகள் : சென்னைசுப்பர் கிங்ஸ் - றோயல் சாலஞ்சர்ஸ்
மைதானம் : டர்பன் நேரம் : மாலை 4 மணி
அணிகள் : மும்பை இந்தியன்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ்
மைதானம் : [illegible]

## ஐ.பி.எல். போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர்கள்

| வீரர்களும் அணிகளும் | போட்டிகள் | இனிங்ஸ் | மொத்த ஓட்டம் | அதி.ஓட் | பௌண்டறி | சிக்சர் |
|---|---|---|---|---|---|---|
| மத்தியூ ஹைடன் (சென்னை சுப்பர் கிங்ஸ்) | 09 | 09 | 426 | 89 | 49 | 17 |
| ஏ.பி.டீ.வில்லியர்ஸ் (டெல்லி டேர் டெவில்ஸ்) | 10 | 08 | 315 | 105* | 26 | 09 |
| சுரேஸ் ரெய்னா (சென்னை சுப்பர் கிங்ஸ்) | 09 | 09 | 309 | 98 | 26 | 15 |
| அடம் கில்கிறிஸ்ட் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 11 | 313 | 71 | 33 | 19 |
| டுமினி (மும்பை இந்தியன்ஸ்) | 10 | 09 | 297 | 59* | 20 | 09 |

★ ஆட்டம் இழக்காமல் (அதி.ஓட் – அதிகூடிய ஓட்டம்)

## ஐ.பி.எல். போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்கள் பெற்ற வீரர்கள்

| வீரர்களும் அணிகளும் | போட்டிகள் | வீசிய ஓவர்கள் | கொடுத்த ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | சிறந்த பந்துவீச்சு |
|---|---|---|---|---|---|
| ஆர்.பி.சிங் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 40.3 | 265 | 16 | 4/22 |
| லசித் மலிங்க (மும்பை இந்தியன்ஸ்) | 10 | 37.3 | 227 | 15 | 3/11 |
| அப்துல்லா (கிங்ஸ் லெவன் பஞ்சாப்) | 09 | 28 | 241 | 14 | 4/31 |
| நெஹ்ரா (டெல்லி டேர் டெவில்ஸ்) | 09 | 34 | 254 | 14 | 3/27 |
| ஓஜ்ஹா (டெக்கான் சார்ஜர்ஸ்) | 10 | 37.3 | 225 | 13 | 3/21 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் நேற்று 60 சத வீதம் வாக்களிப்பு; வாக்களிக்காதோர் வீடு புகுந்து பொலிஸ் தடியடி!

சென்னை, மே 14

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 60 சத வீத வாக்குகள் பதிவாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பு காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி மாலை ஐந்து மணிக்கு முடிவுற்றது.

நேற்றைய வாக்களிப்புக் குறித்த சில விசேட தகவல்கள் வருமாறு:-

* மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் பத்திரமாக சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.
* பல இடங்களில் வாக்காளர்கள் காலை 7 மணிக்கு வாக்குச்சாவடிகளுக்கு வந்து காத்திருந்தனர். வெளியூரில் வசிக்கும் மக்கள் வாக்களிப்பதற்காக தங்கள் சொந்த ஊருக்கு வந்து ஆர்வமுடன் வாக்களித்தனர்.
* பொள்ளாச்சி அருகே கொந்தம்பட்டியில் 2 வாக்குச்சாவடிகளில் மொத்தம் 4 வாக்குகள் மட்டுமே பதிவாகின. வாக்களிக்காத மக்கள் மீது பொலிசார் வீடு புகுந்து தடியடி.
* இதுபோல் தமிழகத்தின் வேறுசில பகுதிகளிலும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுமக்கள் வாக்குப்பதிவை புறக்கணித்தனர்.
* வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டதால் வாக்களிக்க முடியாமல் நடிகர் கமல்ஹாசன் வருத்தம்.
* சாந்திநகர், மேலப்பாளையம், தென்காசி சேந்தமங்கலம் ஆகிய பகுதிகளில் அடையாள அட்டை இருந்தும் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாததால் பல வாக்காளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்
* ஊட்டி மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் ரேஷன் அட்டை காட்டி வாக்களிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் வாக்காளர்களிடையே குழப்பம்.

(அ-06)

# கடல் மற்றும் தரை மார்க்கமாக முல்லையில் சண்டை தொடர்கிறது

முல்லைத்தீவு, வட்டுவாய்க்கால், கரியமுள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் கடல் மற்றும் தரை மார்க்கமாக சண்டை இடம்பெற்றுள்ளது எனப் படைத்தரப்புத் தகவல்கள் நேற்றுத் தெரிவித்தன.

வட்டுவாய்க்கால் பகுதியில் நிலைகொண்டிருக்கும் 59 ஆவது படைப்பிரிவினர் மீது விடுதலைப் புலிகள் கடல் மற்றும் தரை மார்க்கமாகத் தாக்குதல் நடத்தினர். கடல் வழியாகத் தாக்குதல் நடத்த முயன்ற விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படகைப் படையினர் தாக்கி அழித்தனர். மேலும் விடுதலைப் புலிகளின் அதிவேகத் தாக்குதல் படகுகள் நான்கை தாக்கி அழித்தனர் என்றும் படைத்தரப்புச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேவேளை, அந்தப் படைப்பிரிவு நிலை கொண்டிருக்கும் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகளின் சிறுசிறு அணிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்த முயன்றன. அவற்றுக்கு எதிராக நேற்று அதிகாலை 1.30 மணிவரை படையினர் தீவிர தாக்குதல்களை நடத்தினர். அதில் விடுதலைப் புலிகள் பலத்த இழப்புகளைச் சந்தித்தனர் என்றும் -

கரியமுள்ளி வாய்க்கால் பகுதிகளில் 53 ஆவது படைப்பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கடுஞ் சமர் இடம்பெற்றது. இச்சமரில் இரு தரப்புக்கும் இழப்புகள் ஏற்பட்டன. சளுவலு தோப்பம் பகுதியில் 59 ஆவது படைப்பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைத்தரப்புக்கு இழப்புகள் ஏற்பட்டன எனப் படைத்தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

இதேசமயம் 59 ஆவது படைப்பிரிவினர் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கடற்புலிகளின் நான்கு தற்கொலைத் தாக்குதல் படகுகளையும் தாம் வெற்றிகரமாக முறியடித்ததாகவும் எனவும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (அ-சி)

## பாதுகாப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களையும் தாக்குதலுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட படங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த பின்னரே இந்த அறிக்கையை மேற்படி சங்கம் வெளியிட்டிருக்கின்றது.

சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது என அந்தச் சங்கம் குறிப்பிட்டிருக்கிறது.

பாதுகாப்பு வலயப் பகுதியில் முன்னர் எடுக்கப்பட்ட படங்களுக்கும் பின்னர் எடுக்கப்பட்ட படங்களுக்கும் பாரியளவு வித்தியாசங்கள் உள்ளன என்று முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. செய்மதிப் படங்களை ஒப்பிட்டுப் பார்த்ததன் மூலம் பாரியளவு இடம்பெயர்வு நடந்துள்ளது. மேலும் கட்டடங்கள் போன்ற அமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அந்தப் பகுதியில் ஷெல் வீச்சால் ஏற்பட்ட குழிகளும் தென்படுகின்றன என விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமெரிக்க சங்கத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

முன்னர் எடுக்கப்பட்ட படங்களில் நெருக்கமான கூடாரங்கள் போல் காணப்பட்ட அமைப்புகள், கடந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் அழிவடைந்துள்ளன என்று அந்தச் சங்கம் மேலும் தனது ஆய்வறிக்கையில் தெரிவிக்கிறது.

இதேவேளை, இந்த ஆய்வு குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ள இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு, குறிப்பிட்ட குழிகள் எப்படி வந்தன எனத் தெரியாது என்றும் -

புலிகள் அங்குள்ள கட்டடங்களைத் தகர்ப்பதற்காக நிலக்கண்ணிகளைப் புதைத்துள்ளனர். இதனால் இந்தக் குழிகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் - தெரிவித்துள்ளது.


சிங்களம்
பிரிவு I
அடிப்படையில்
இருந்து
பிரிவு II
கட்டுரை, எழுத்து,
வாசிப்பு, கடிதம்,
BY.K.கார்த்திகேயன்
ஆரம்பம் 16.05.2009
சனி காலை 9 மணி
சாயி கல்வி நிலையம்,
சிவன் அம்மன் வீதி,
திருநெல்வேலி.



அரசியல்
K.S.இளங்கோ
கருத்தரங்கு A/L 2009
இன்று அல்லது
நாளை 15.05.2009
காலை 9 மணி.
D.M.I
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## கிராண்ட்பாஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தக் கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர்கள் சிலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர் எனவும், பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## ஆஸ்பத்திரி மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வளாகத்திலேயே அடக்கம் செய்ய முடியுமா என்று நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் - என்றார்.

முள்ளிவாய்க்கால் தற்காலிக வைத்தியசாலை மீது நேற்றுடன் மூன்றாவது தடவையாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இம் மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற தாக்குதலில் 65 பேர் பலியாகினர்; 56 பேர் காயமுற்றனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் 47 பேர் பலியாகினர் 56 பேர் காயமுற்றனர்.

இதேவேளை, பிரிகேடியர் உதய நாணயக்காரவிடம் நேற்றைய சம்பவம் குறித்து கேட்டபோது, மோதலற்ற பிரதேசங்களையும் சேர்த்து புலிகளிடம் 4.5 கிலோமீற்றர் பகுதிதான் எஞ்சியுள்ளது. எனவே இந்தப் பகுதியில் ஷெல் தாக்குதல்களை நடத்தத்தேவையில்லை. இராணுவத்தினர் சிறு குழுக்களாக சிறு ஆயுதங்களைக் கொண்டு முன்னேறி வருகின்றனர் - என்றார்.

(அ-சி)


A/L 2010
பொருளியல்
புதிய அலகு
பணமும் வங்கியும்
ஆரம்பம் 14.05.2009
வியா 4.30 P.M
By.P.சண்
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)


# புலிகளின் பல்குழல் எறிகணைச் செலுத்தி கண்டெடுக்கப்பட்டதாக படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

விடுதலைப்புலிகள் பயன்படுத்திய பல்குழல் எறிகணைச் செலுத்தி ஒன்றினை கரிய முள்ளி வாய்க்கால் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் நேற்றுக் காலை கண்டெடுத்துள்ளனர்.

58ஆவது டிவிஷனின் கீழான 9ஆவது கெமுனு வாச் படையினர் கண்டெடுத்த இந்த பல்குழல் எறிகணை செலுத்தி 6 குழல்களை கொண்டிருப்பதுடன் 8 கி.மீ வீச்சுடையது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொப்பிகல பகுதியில் இருந்தும் இதற்கு முன்னர் புலிகளின் பல்குழல் எறிகணை செலுத்தி ஒன்றைப் படையினர் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்குழல் எறிகணை செலுத்தியுடன் ரி56 ரக துப்பாக்கிகள் 70ம் 60 மி.மீ மோட்டார்கள் இரண்டும் இலகுரக இயந்திரதுப்பாக்கிகள் 6உம் மீட்கப்பட்டன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## புலிகளின் விமானங்களின் உதிரிப்பாகங்கள் கண்டெடுப்பு

கொழும்பு, மே 14

முல்லைத்தீவு, திரவிக்குளம் பகுதியில் நேற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட 57 ஆவது டிவிஷனின் கீழான 11 ஆவது ஆட்லறிப் படை அணியினர் புலிகளின் விமான உதிரிப்பாகங்களை கண்டெடுத்துள்ளனர்.

சுழல் பிளேட்டுக்கள், தொடர்பாடல் சாதனங்கள், ஓடுபாதை விளக்குகள் மற்றும் புலிகளின் விமானப் படைப்பிரிவு தொடர்பான ஆவணங்கள் என்பவற்றை படையினர் கணடெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புரொப்பல்லர்கள் மூன்றும், 4-சிலின்டர் இயந்திரங்கள் இரண்டும், பிரதான சக்கரங்கள் ஐந்தும், முன் சக்கரங்கள் (NOSE WHEELS) மூன்றும் மீட்கப்பட்டவற்றில் அடங்கும் என்றும் பாதுகாப்புத்தரப்பு தெரிவித்தது.

(அ-2)

## செஞ்சிலுவைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தின்போது இவருடன் உடனிருந்த இவரது தாயாரும் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமீபகாலமாக இவருடன் சேர்த்து மூன்று பணியாளர்கள் இந்தப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவிக்கின்றது.

இந்தப் பகுதியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இருபதுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

## இந்தியத் தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச மனிதாபிமான - மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டால், அதற்கு இரு தரப்புக்களும் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று பாதுகாப்புச் சபை வலியுறுத்தவேண்டும்.

இலங்கை அரசு பொதுமக்களுக்கு எதிராக எறிகணைத் தாக்குதலை மேற்கொள்ளப் போவதில்லை என்ற உறுதிமொழியை தொடர்ச்சியாக மீறி வருவதால் அது நம்பகத் தன்மையற்றதாக மாறியுள்ளது என்றும் சாம் ஜரிவி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயம் உட்பட மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு உடனடியாக எவ்வித தடைகளுமின்றி சர்வதேச கண்காணிப்பாளர்கள் மற்றும் அமைப்புகளை அனுமதிக்கவேண்டும். இதன் மூலம் நேரடியாக நிலைமையை பார்வையிட்டு, மனித உரிமை, மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## மோதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வட பகுதியில் தொடரும் மோதல்கள் காரணமாக உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்து பிரிட்டிஷ், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்கள் தமக்கிடையேயான சந்திப்பின் போது ஆழ்ந்த கவலை வெளியிட்டனர்.

பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் கடந்த பலநாள்களாகப் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என, வெளியாகியுள்ள தகவல் குறித்து அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

### மோதலை நிறுத்த இருதரப்புக்களுக்கும் வேண்டுகோள்

மோதலை உடனடியாக நிறுத்திவிட்டு பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற அனுமதிக்குமாறு அவர்கள் இரு தரப்புகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும். மேலும் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஏப்ரல் 27 ஆம் திகதி மோதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்து விட்டன. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என அளித்த உறுதி மொழிகளை இலங்கை அரசு பின்பற்ற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைக்காக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஐ.நா. மனிதாபிமான குழுக்களுக்கு அனுமதியளிக்க வேண்டும் எனவும் இருவரும் கேட்டுள்ளனர்.

மோதலில் சிக்கியுள்ளவர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சென்றடைவதற்கும் அவசர சிகிச்சை தேவைப்படுபவர் களை செஞ்சிலுவை சர்வதேசக் குழு வெளியேற்றுவதற்கும் அனுமதியளிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ள இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இலங்கையில் தேசிய அரசியலில் சிறுபான்மை சமூகத்தினருக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கக்கூடிய அரசியல் தீர்வின் அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளனர். (அ-சி)


டிஜிற்றல் பிறின்ட்
90 ரூபாயில் இருந்து

★ இல-212, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
★ இல-40, பிரவினா வீதி, நந்மலானை.
T.P -0718270396, 0777110610, 0212229607



வீற்பனைக்குண்டு
மகோகனி, சப்பு பலகை, தீராந்திவகைகள்
பீடிவ், மோல்டிவ் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு-இல 194, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (கடைத்தெரு பிள்ளையார் கோயில் முன்பாக) 0719134767, 0777073702



G.A.Q யாழ், பேராதனை 2009/2010
★ B.A Part I, II
★ B.A பேராதனை.
விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.



PHYSICS => K.Selvan
A/L 2010
Sound
ஆரம்பம்-14.05.2009 Thur 4.30p.m
(Thur, Fri -4.30-5.30 p.m)
NAVALAR
Anaipanthy
Jaffna.




கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
விசேட சிறப்பு சலுகை
100% செய்முறைப்பயிற்சி
கணினி & LapTop களினை நீங்களே அமைத்துக் கொள்ள...
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Duration 12 Months
ஆரம்பம் : 15/05/2009, 17/05/2009, 18/5/2009 காலை, மாலை நேர வகுப்புக்கள்
Microprocessor, Varius Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation - of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
DMI
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சயனல சேசன் அருகாமை) Tel: 021 222 4403


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.